கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

-4-
அண

கேட்டீர்களா!

ஜெமினி அறிவுச் சோதனை

'யூகிவாரிஸு' என்ற ஜப்பானியப் படத்தைப் பார்த்த குழந்தைகளுக்காக ஜெமினியில் ஓர் அறிவுச் சோதனை நடத்தியதை நீங்கள் அறிவீர்கள். அந்தப் போட்டியில் கலந்துகொண்ட எல்லாக் குழந்தைகளுக்கும் இந்த மாதம் பரிசுகள் வழங்கப்பட்டன. ஜே. சந்திரா, பி என். வைத்திநாதன், காமாக்ஷி, என். சந்தானம் ஆகிய நால்வரும் முறையே முதல் நான்கு பரிசுகள் பெற்றார்கள். பரிசு பெற்ற இந்த நாலு குழந்தைகளுக்கும் கண்ணன் கழகத்தின் சார்பாகவும் சில பரிசுகள் வழங்கப்பட்டன.

சென்னையில் ராஷ்டிரபதி

ராஷ்டிரபதி ராஜேன் பாபு குடும்பத்துடன் சமீபத்தில் தென்னாட்டுக்கு விஜயம் செய்தார் 'மதுரை தனுஷ்கோடி, ஸ்ரீரங்கம், சிதம்பரம் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று கோயில் மரியாதைகளுடன் சுவாமி தரிசனம் செய்துவிட்டுச் சென்னை திரும்பினார். சென்னை கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் ஒரு பொதுக்கூட்டத்திலும் பேசினார்.

மகாத்மா காந்தியின் வாழ்க்கைப் படம்

'மகாத்மா காந்தி' என்று ஒரு சினிமாப் படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படப்பிடிப்புக்குக் காரணமானவர் லூயிபி கெய்ன்ஸ் பரோ என்பவர். உலகிலேயே முதல் முதலாக இந்தப் படம் அமெரிக்காவின் தலைநகரில் திரையிடப்பட்டது இந்தப் படத்தைக் காண அமெரிக்க ஜனாதிபதி ஐஸன்ஹோவரும் அவர் மனைவியும் வந்திருந்தார்கள்.

ஒழுக்க மறுமலர்ச்சிச் சங்கம் (M. R. A)

பல நாட்டைச் சேர்ந்த கலைஞர்கள் இந்தச் சங்கத்தில் சேர்ந்து பல நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார்கள். சமாதானமாக வாழவும் ஒழுக்கத்தை மக்களிடையே மீண்டும் ஓங்கச் செய்யவும் பாடுபடுவதே இவர்கள் லட்சியம். இவர்கள் ஒவ்வொரு ராஜ்யமாகச் சென்று சிறந்த நாடகங்களை நடித்துக் காட்டுகிறார்கள். 'ஜோதம் பள்ளத்தாக்கு' முதலிய நாடகங்கள் சென்னையில் நடந்தபோது திரளான மக்கள் வந்து பார்த்து மகிழ்ந்தார்கள்.

ரெயில்வே பிரயாணச் சலுகை

கல்வி யாத்திரை போகும் மாணவர்களுக்கு ரெயில்வே கட்டணச் சலுகையை ஏற்கனவே கொடுத்து வருகிறார்கள். இப்போது ஆசிரியர்களின் கோஷ்டிக்கும் இந்தச் சலுகை காட்ட எண்ணியிருக்கிறார்கள். 1953-54-ஆம் வருஷத்திலிருந்து முதல் வகுப்பை எடுத்து விடவும் தீர்மானித்துவிட்டார்கள்.

சென்னை ரேடியோ நிலையம்

மெரினா, இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆபீஸுக்கு அருகில் புதிய ரேடியோ நிலையம் ஏற்படுத்தப் போகிறார்கள். கட்டிட வேலை ஆரம்பமாகிவிட்டது.

பொருளடக்கம்

மலர்: 4 இதழ்: 3

மார்ச் '53

11 APR ... MADRAS

குழந்தைகளே! பக்கம் .. 2
அசட்டுப் பிச்சு - ஆர்வி 3
கரடியுடன் போர் - பிலோ இருதயநாத் .. 9
ஜயமணி - பி. கே. தேவராஜுலு 13
மருந்துக்கடை மல்லப்பர் - என். தேவாம்சம் 18
விருந்து - விஜி 20
இரு நண்பர்கள் - எஸ். பானுமதி 21
கண்ணன் கழக அங்கத்தினர்கள் 27
செல்லாத ரூபாய் - ரு. துளசிதாஸ் 29
மாயப் புத்தகம் - என். எஸ். ஸ்ரீ 32
கொடி விளையாட்டு - 'ரமணீயன்' 36
புதன் - பெ. நா. அ., ஜே. பி. மா. 37
சாதுவின் சாபம் - வி. எஸ். விஜயா 42
பட்டம் பார்! - 'ரமணன்' 47
பாட்டிலில் கப்பல் - கே. எஸ். பி. 48
அபாயச் சங்கு - 'நீலம்' 49
கண்ணன் தபால் 53

வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், மஞ்சரி, கண்ணன்

குடும்பச் சந்தா ரூ. 12/-

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

குழந்தைகளே!

முன்னைப்போல மறுபடியும் கதை, கட்டுரைப் போட்டி என்று ஏதாவது நடத்தக்கூடாதா என்று சில குழந்தைகள் எழுதியிருக்கிறார்கள். வெயிலின் கடுமை வர வர அதிகமாவதுபோல் பரீட்சைப் படிப்பின் கடுமையும் அதிகமாகி வரும். இந்தச் சமயத்தில் வந்து நாம் போட்டி வைக்கலாமா? ஆகவே விடுமுறை விடட்டும்; போட்டிமேல் போட்டியாக நடத்தி ஜமாய்த்து விடுவோம்.

அசட்டுப் பீச்சு என்ற புதிய தொடர்கதை இந்த இதழில் ஜாம் ஜாம் என்று ஆரம்பமாகிறது. கதையைப் பற்றி நான் ஒன்றும் பெருமையாகச் சொல்லப் போவதில்லை. நீங்களே படித்துப் பாருங்கள். உங்களைச் சுவாரஸ்யக் கடலில் ஆழ்த்தி, மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கச் செய்யும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆகவே படித்துவிட்டு எழுதுங்கள். உங்கள் அபிப்பிராயத்தைக் கண்ணன் தபால் பகுதிக்கே தாராளமாக எழுதலாம். யாருக்காவது பிரதிகள் கிடைக்கவில்லை என்றால் உடனே நாலே காலணா தபால் தலைகளாக வாங்கி, விலாசத்துடன்கூட வைத்து எங்களுக்கு அனுப்பிவிடுங்கள்.

கண்ணன் தபால் பகுதியில் உங்கள் சந்தேகங்கள் என்று உங்கள் கேள்விகளைப் பிரசுரித்துப் பதில் எழுதி வருகிறோம். இதைச் சிலர் வேறுவிதமாகக் கருதி அவசியமில்லாத கேள்விகளையெல்லாம் எழுதுகிறார்கள். நான் கிண்டலாகப் பதில் சொல்லி, அதை உங்களைப் படிக்கவைத்து அதனால் உங்கள் பொன்னான நேரத்தை வீண் பொழுதாகக் கழியும்படி செய்ய விரும்பவில்லை. பெயர் பிரசுரமாகுமே என்று அசட்டுக் குப்பைக் கேள்விகளும் கேட்காதீர்கள். உங்கள் கேள்வி முதலில் உங்களுக்கு உபயோகமாக இருக்கவேண்டும். உங்களுக்குக் கிடைக்கும் பதிலினால் அது பிறருக்கும் பயன்படுவதாக இருக்க வேண்டும். இத்தகைய கேள்விகளையே எழுதுங்கள்.

அடுத்த இதழில், 'அபாயச் சங்கு' முடிவுறுகிறது. அதைத் தொடர்ந்து சித்திரக் கதையோ மற்றொரு தொடர்கதையோ வெளியிட எண்ணியிருக்கிறோம். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்,' என்பது உங்களுக்குத் தெரியும். அதற்கு உதவியாக அடுத்த இதழிலிருந்து ஆஸனப் பயிற்சி புகைப்படங்களுடன் ஆரம்பமாகிறது. உங்களைப் போன்ற ஒரு குழந்தையினுடைய படங்களையே பிரசுரிக்கப் போவதால் நீங்கள் அதைப் பார்த்து வெகு சுலபமாகப் பயிற்சி பெறலாம்.

அடுத்த கண்ணன் கழகக் கூட்டம் கும்பகோணத்தில் நடைபெறும். இடம், தேதி இவற்றைப் பின்னர் அறிவிப்போம்.

—ஆசிரியர்.

1. தெரியாது

"டேய், சுப்பிரமணியா! உனக்குச் சமாசாரம் தெரியுமாடா?" என்று கேட்டான் மாணிக்கம்.

"தெரியாதுடா!"

"வைத்தி, உனக்கு-?"

"எனக்கும் தெரியாதுடா!'

"லோகு, புலிக்குட்டி, லோட்டஸ்-ஐ, ஸ்ரீகாந்த்! உங்களுக்கு-?"

"ஊஹும். தெரியவே தெரியாது!"

"என் கேக்கறேன், தெரியுமோ?"

"தெரியாதுடா—"

"என்ன கேக்கறேன், எதைக் கேக்கறேன் - அதாவது தெரியுமா?"

"அதுவும் தெரியாதுடா!"

"சரியாப் போச்சு; நல்ல மேதாவிங்கடா நீங்க! பின்னே எதுடா தெரியாது, தெரியாதுன்னீங்க!"

"அதாண்டா தெரியாமெ முழிக்கிறோம்!" என்றான் ஸ்ரீகாந்த். அவனுக்கு, 'பிரிஞ்ஜால்' என்று ஒரு பட்டப் பெயர் உண்டு. "ஆமாண்டா" என்று ஒத்துப் பாடினான் 'ஈச்சு மூச்சு' லோகு.

"ஹெ ஹ்ஹே! முழிக்கிறியோ! பிரிஞ்ஜாலுக்கு எதுடா கண்ணு, முழிக்கிறதுக்கு?" என்று மாணிக்கம் வாய்த் தவறுதலாகச் சொல்லிவிட்டான். நண்பர்கள் எல்லாரும் கெக்கலி கொட்டி நகைத்தார்கள்.

கட்டை குட்டையாக, 'கழுக்கு-மொழுக்கு' என்றிருந்த ஸ்ரீகாந்த்துக்கு மூக்குக்கு மேல் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

அதற்குள் லோகு, ஈச்சு மூச்சுக் குரலில், "அதோ ஏ. பி. வர்றாண்டா!" என்று கூவினான்.

இருபத்திரண்டு அங்குல 'ஹெர்க்குலிஸ்' சைக்கிளில் பதினைந்து, பதினாறு வயதுள்ள ஒரு பையன் கனவேகமாக வந்துகொண்டிருந்தான். பபூன் மாதிரி 'புல்பான்ட்'டை முன்னங்கால் வரை மடித்துவிட்டிருந்தான். வாரிச் சீவாத முன் தலை மயிர் நெற்றியில் விழுந்திருந்தது. 'கப்' வைத்த சட்டை. 'ஸ்கவுட் ஸ்கார்ப்'பை 'டை' மாதிரி கழுத்துக்குக் கீழே முடிச்சுப் போட்டிருந்தான். தொன்னைக் காதுகள். இந்தக் கோலத்தோடு வந்தவன் சர்க்கஸ்காரன் குதிரையிலிருந்து குதிப்பதுபோல இறங்கினான்.

நங்கபுரம் நாஷனல் ஹைஸ்கூலில் அந்த வருஷம்தான்

'குடுமி' வைத்தி

காலேஜ் வகுப்புக்கள் இணைக்கப் பட்டிருந்தன. அங்கிருந்த மாணவர்களில் பெரும்பாலோர் காலேஜில் சேருவதற்குத்தான் இருந்தார்கள். அவர்களில் சைக்கிளில் வந்த ஏ. பி. என்கிற ஏ. பிச்சுமணியும் ஒருவன். கோழிமுட்டை எல். டி. அவனுக்குச் சூட்டிய 'அசட்டுப் பிச்சு' என்ற பட்டப்பெயர்தான் ஆங்கில எழுத்துக்களில் ஏ. பி. என்று ஆகியிருந்தது.

அநேகமாக எல்லாருக்குமே அந்த ஊர்ப் பையன்கள் வட்டாரத்தில் சொந்தப் பெயர் ஒன்றும் பட்டப் பெயர் ஒன்றும் வழங்கி வந்தன. சிறிய பிழை இருந்தாலும் மார்க்கில் சுழித்துவிடும் வாத்தியாருக்குத்தான் கோழிமுட்டை எல். டி. என்ற பட்டப் பெயர் வழங்கியது. ஆனால் ஏ பி.க்கு மட்டும் தன் சொந்தப் பெயரும் பட்டப்பெயரும் ஐக்கியமாகியிருந்ததில் எவ்வளவோ பெருமை!

அவனை அந்த ஊர் நாஷனல் ஹைஸ்கூலில் சேர்த்தபோது ஐ. பிச்சுமணி என்றுதான் பெயர் கொடுத்திருந்தார் அவனுடைய அப்பா. அவர் பெரிய மண்டி வைத்திருந்தார். அப்படியிருந்தும் ஆசிரியர்கள் உள்பட எல்லாரும் பையனை, 'ஐ. பி.' என்று கூப்பிடுகிறார்கள் என்பது அவர் காதில் விழுந்தது. 'ஐ. பி.' என்றால் கடன் கொடுக்காமல் காவடியாகிவிட்டவன் என்று அர்த்தம். அதனால் கிடு கிடுவென்று வாத்தியாருக்கு ஒரு கடிதம் எழுதினார். "ஐயா, என் பெயர் ஐயாசாமி என்பது. என் பையனுடைய பெயருக்கு முன்னால் 'ஐ' என்று 'இனிஷியல்' கொடுத்திருந்தேன். என் பெயரை 'ஏ' என்றும் மாற்றி எழுதலாம். இனிமேல் அவன் பெயரையும், 'ஏ. பிச்சுமணி' என்று தயவு செய்து உடனே மாற்றிவிடுங்கள்" என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

"அடே, இதுதாண்டா உனக்குப் பொருத்தமான பெயர்! ஏ. பி. 'ஏ. பிச்சுமணி' என்றும் கொள்ளலாம்; 'அசட்டுப் பிச்சு' என்றும் சொல்லலாம்!" என்று அவன் வகுப்பு கோழிமுட்டை எல். டி. யே ஒரு புதிய பட்டப் பெயரையும் முடிசூட்டி வைத்தார். மாணவர்கள் எல்லாரும் இதைப் பலத்த கரகோஷத்துடன் ஆமோதித்து, இந்தப் பெயர் சூட்டு விழாவைச் சிறப்பாக முடித்தார்கள்.

ஆனால் பிச்சுமணி இதற்கெல்லாம் கலங்கவேயில்லை. கமலக் கண்ணனை, 'லோட்டஸ்-ஐ' என்று ஒருவன் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தபோது அவன் அன்று முழுவதும் தேம்பித் தேம்பி அழுதான். அவனுக்குக் கண்கள் கொஞ்சம் மேலாகப் பிதுங்கி வந்திருந்தன. அதனால்தான் அவனுக்கு அழுகையும் அதிகமாக வந்தது. ஆனால் இப்போது அவர்களுக்கு எல்லாமே சகஜமாகப் பழகிப் போய்விட்டது. சொந்தப்

பெயரையே அநேகமாக மறந்து கூடப் போய்விட்டார்கள். ஆனால் பிச்சுமணியை எப்படிக் கூப்பிட்டாலும் அவன் சாமானியத்தில் ஏனென்று கேட்கமாட்டான். பையன் மூளையில் எந்த விஷயமும் போய்த் தாக்கக் குறைந்தது ஒரு நாழிகையாவது பிடிக்கும்!

அது எப்படியோ போகட்டும்; இன்று தலை போவதுபோல வெகு வேகமாக வந்த ஏ. பி., "நான் போயிட்டு அப்புறம் வரேண்டா!" என்று கிளம்பினான்.

"என்னடா அவசரம்?" என்றான் டைகர் மணி. அவனைப் புலிக்குட்டி என்றும் பூனைக் கண் மணி என்றும் சொல்வதுண்டு. எப்படிச் சொன்னாலும் அவனும் கோபித்துக் கொள்வதில்லை.

"இன்னிக்கு, 'கிரீன்லண்ட்ஸ்' ஹோட்டலில் ஒரு பெரிய டீபார்ட்டி நடக்கிறது. அதற்குப் போகணும்டா!" என்றான் பிச்சு.

"அதைத்தாண்டா இவங்களைக் கேட்டேன். அங்கே ஒரே கொடியும் தோரணமுமா அமர்க்

'பிரிஞ்ஜால்' ஸ்ரீ காந்

களப்படுதே, என்னடா சமாசாரம்னு கேட்டாக்க, எல்லாம் முழிச்சுதுங்க. அங்கே டீபார்ட்டியா?'' என்றான் மாணிக்கம்.

''ஆமாம்.''

''எதுக்கு டீபார்ட்டி? யாருக்கு?''

பிச்சுமணி அதற்குப் பதில் சொல்லாமல் சைக்கிள் மீது தாவினான்.

''நானும் வரட்டுமாடா?'' என்றான் பிரிஞ்ஜால்.

''வேண்டாம்!''

''நான்-?'' என்றான் வைத்தி.

''சரி; ஏறிக்கோ!'' என்றான் பிச்சு. கண் இமைக்கும் நேரத்துக்குள் அவிழ்ந்த குடுமியைப் பிடித்துக்கொண்டே வைத்தி, பின் வீட்டில் ஏறிக்கொண்டான்.

* * *

ஹோட்டல் கிரீன்லண்ட்ஸ் பெரிய அரண்மனைபோலிருந்தது. முன்புறம் விதம் விதமான செடிகளும் கொடிகளும் அழகாகக் கத்தரித்துவிடப்பட்டிருந்தன. சிவப்பு, மஞ்சள், நீலம், ஊதா, வெள்ளை, பச்சை எல்லாம் கலந்த பல வர்ணப் புஷ்பங்கள் கண்ணுக்குக் குளிர்ச்சியாகப் பூத்துக் குலுங்கியிருந்தன. வாசலில் இரண்டு கூர்க்கா காவற்காரர்கள், 'புல்-டாக்' மாதிரி விறைப்பாக நின்றுகொண்டிருந்தார்கள். சுமார் ஒரு பர்லாங் சுற்றளவுக்கு வரிசையாகப் புதுப் புது மாடல் மோட்டார் வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. கூர்க்கா ஒவ்வொரு காருக்கும் கைகாட்டிக்கொண்டிருந்தான். தோரணங்களும் பல்புகளும் ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்தன.

மணி ஐந்து அடித்துவிட்டது. அப்போதுதான் பிச்சுவும் வைத்தியும் சைக்கிளில் வந்து இறங்கினார்கள். பிச்சு சைக்கிளுடன் உள்ளே போகத் தொடங்கினான். அவனைப் பார்த்து முறைத்த கூர்க்காவை அவனும் முறைத்துப் பார்த்துவிட்டுப் போனான். அவனைத் தடுப்பதா தடுக்காமலிருப்பதா என்று கூர்க்கா தயங்கிக்கொண்டிருப்பதற்குள் அவன் பாதி வழி உள்ளே போய்விட்டான். ஆனால் பாவம், வைத்தி உள்ளே நுழையும்போது, ''ஏய்! இதர் ஆவ்!'' என்று கூர்க்கா அவன் கையைப் பிடித்து இழுத்து நிறுத்திக்கொண்டு விட்டான். அவிழ்ந்த குடுமியில் ஒரு கையும் கூர்க்காவிடம் ஒரு கையுமாகத் திண்டாடிய வைத்தியின் இடுப்பு வேஷ்டி நழுவியது. ''டேய்! டேய்!'' என்று கையைத் திமிறிக்கொண்டான்.

அந்த இடம் இந்திரலோகம் போல இருந்ததைக் கண்டு பிச்சுமணி பிரமித்துப் போனான். சைக்கிளை ஓர் ஓரமாக நிறுத்திப் பூட்டினான். ஊரிலுள்ள பெரிய மனிதர்கள், நடிக நடிகையர் எல்லாரும் அந்தப் பார்ட்டிக்கு விஜயம் செய்

திருந்தார்கள். கிரிக்கெட் 'ஆல் ரவுண்டர்' கன்னையாகூட அங்கே வந்திருந்தார். வில்லன் சுரேந்திரன் ஹீரோ ராஜகாந்தன், காமெடியன் முக்குருணி ஸினிமா ஸ்டார் ஸ்யமந்தகமணி, புது நக்ஷத்திரம் கல்பலதா எல்லாரும் மேஜைக்கு முன்னே உட்கார்ந்திருந்தார்கள்.

அவனுடைய அப்பாவின் கண்ணில் படாமல் இருக்க வேண்டுமே என்று பிச்சுமணிக்கு ஒரே கவலை. பாதியில் பார்த்தாலும் பரவாயில்லை. இப்பொழுதே பார்த்து விட்டால், "எங்கேடா வந்தே?" என்று விரட்டி விடுவார்.

மேஜைகளுக்கு எதிரே ஒரு மேடையைச் சிங்காரமாய் அலங்கரித்திருந்தார்கள். முன்புறம் ஒரு நீலத்திரை தொங்கியது.

ஒவ்வொருவராக எல்லாரும் உள்ளே போனார்கள். அவனுக்கு முன்னால் ஒரு போலீஸ் அதிகாரி போய்க்கொண்டிருந்தார். அந்தச் சமயம் பார்த்துப் பிச்சுமணியும் நுழைந்தான்.

ஒருவன் பன்னீர் தெளித்தான். ஒருவன் பூச்செண்டு கொடுத்தான். எல்லா உபசாரங்களையும் அவன் தயங்காமல் ஏற்றுக்கொண்டான். மேஜைமேல் பார்க்கும்போதே நாக்கில் ஜலம் ஊறியது! ஐஸ் கிரீம், பாதாம் ஹல்வா, கட்லெட் இன்னும் பெயர் சொல்லத் தெரியாத வகை வகையான சிற்றுண்டிகள் அழகழகான தட்டுக்களில் கண்ணைப் பறித்தன.

புது நக்ஷத்திரம் கல்பலதாவுக்கும் போலீஸ் அதிகாரிக்கும் நடுவில் ஒரு நாற்காலி காலியாக இருந்தது. அந்த இடத்தில் போய் அவன் வெகு ஆடம்பரமாக உட்கார்ந்து கொண்டான். போலீஸ் அதிகாரி

'லோட்டஸ்-ஐ' கமலக்கண்ணன்

அவனை ஒரு முறை பார்த்தார். அதற்குப் பிறகு அந்தப் புது நக்ஷத்திரமும் அவனை ஒரு முறை எறிட்டுப் பார்த்தாள். பிச்சுவோ பிச்சுமாதிரி உட்கார்ந்திருந்தான்.

எங்கும் ஸ்பூனும் தட்டும் இடிபடும் 'கிணிங், கிணுங்' சப்தம் கேட்கத் தொடங்கியது. பிச்சுவும் ஒரு கை பார்க்கத் தொடங்கினான். வெள்ளைத் துணி கட்டிய ஸர்வர்கள் அடிக்கடி வந்து ஏதாவது மேலும் மேலும் வைத்துக் கொண்டேயிருந்தார்கள். பாவம், வைத்தி என்ன ஆனானோ என்ற கவலையில் பிச்சு தட்டுக்களையும் கிண்ணங்களையும் காலி செய்து கொண்டிருந்தான்.

மணி ஆறு அடித்தது. எல்லாரும் சட சடவென்று கை தட்டினார்கள். நீலத்திரை மெல்ல விலகியது. நட்டுவனாரின் ஜாலரா ஒலித்தது. மிருதங்கத்தின் நாதம் எழுந்தது. ஜல் ஜல் என்று கால் சதங்கை ஒலிக்க, ஒரு சிறு பெண் மேடை மீது தோன்றி நாட்டியம் ஆடினாள். அதற்குப் பிறகுதான், பேபி வனிதமாலாவின் நாட்டிய அரங்கேற்றத்துக்காக இந்தப் பார்ட்டி நடக்கிறது என்பது தெரிந்தது.

'டைகர்' மணி

நாட்டியம் பலே ஜோராக இருந்தது. தாளத்தின் ஒலி காதுக்கு வெகு இனிமையாக இருந்தது. எல்லாரும் தம்மை மறந்து ரஸித்துக்கொண் டிருந்தார்கள். மேலே வைரப் பொட்டுகள் மலிந்த நீல வானம்; ஒரு புறத்தில் பிறைச் சந்திரன்; நவரத்தின விளக்குகள்; சுற்றிலும் நறுமணம் வீசும்புஷ்பத் தோட்டம்; மெல்லத் தழுவிச் செல்லும் தென்றல் காற்று; எதிரே கண்ணுக்கு விருந்தான நாட்டியக் கச்சேரி!

ஆனால்,—தடால் என்று எல்லாரும் அதிர்ச்சியடையும்படி ஏதோ ஒரு வெளிச்சம் கண்ணைப் பறித்தது. கண்ணை மூடித் திறப்பதற்குள் ஒரே இருட்டு. எங்கும் கண்ணைக் குருடாக்கும் இருட்டு. அதுவும் வெளிச்சத்தைப் பார்த்துக்கொண்டிருந்த கண்களைப் பொட்டையாக்குகிற இருட்டு. "வெளிச்சம், வெளிச்சம்!" என்று பெண்களும் ஆண்களும் கூவினார்கள்.

திடீரென்று நாலாபுறமும் கூச்சல் கிளம்பியது. 'வீல்' என்று ஒரு பெண்ணின் குரல் நடுவில் பயங்கரமாகக் கேட்டது. ஒருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. ஆட்கள் தட தடவென்று அங்குமிங்கும் இருட்டில் ஓடினார்கள். யாரோ ஒருவன் கையில் கொண்டு வந்திருந்த டார்ச்சு விளக்கை அடித்தான். மண்டிக் கடை ஐயாசாமி, "டேய் பிச்சுமணி! டேய் பிச்சுமணி!" என்று கூப்பிட்ட குரல் தனியாகக் கேட்டது.

எல்லாம் ஒரே கதம்பக் குழப்பமாய் இருந்தது. "விடாதே, பிடி! ஓடுகிறான்!" என்ற கூச்சல் காதைச் செவிடாக்கியது.

பதினைந்து நிமிஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன. அப்புறம்தான் ஒருவன் ஒரு பெட்ரோமாக்ஸ் விளக்கைக் கொண்டுவந்தான்.

பிச்சு உட்கார்ந்திருந்த நாற்காலி காலியாக இருந்தது. பக்கத்தில் அந்தப் போலீஸ் அதிகாரியின் இடமும் காலியாக இருந்தது. இந்தப் பக்கம் புதிய நக்ஷத்திரம் கல்பலதா அலங்கோலமாய் விழுந்து கிடந்தாள்!

"வைர நகைகள் போய்விட்டன! பையனைக் காணோம்! யாரோ திருடர்கள்!" என்று அங்குள்ளவர்கள் தலைக்குத் தலை பேசினார்கள்.

கல்பலதாவின் மேலிருந்த வைர நகைகள் போன இடம் தெரியவில்லை!

"பிச்சு! டேய் பிச்சு!" என்று ஐயாசாமி, கூவிக்கொண்டே யிருந்தார்.

"நடுவில் உட்கார்ந்திருந்த அந்தப் பையன் எங்கே? போலீஸ் அதிகாரி எங்கே?" என்று ஒவ்வொருவரும் மற்றவர்களைக் கேட்டார்கள்.

"தெரியாது! தெரியாது!"

(தொடரும்)

கரடியுடன் போர்

பிலோ இருதயநாத்

வாசன் என்பவர் குள்ளக் கரைத் தோட்டத்திலே மேஸ்திரியாக வேலை பார்ப்பவர்.

இவருடைய முதல் தாரத்திற்கு நர்சன் என்கிற பையன் ஒருவன் இருந்தான். குள்ளங்கரையில் வசிப்பவர்கள் சுமார் மூன்று மைல் நடந்து, பொம்மன் எஸ்டேட்டுக்கு வந்து, பிறகு பஸ்ஸில் கோத்தகிரி என்ற நகரத்துக்குச் செல்ல வேண்டும்.

நர்சன் தாயின் படத்தை வணங்கிவிட்டுத் தினமும் நடந்து வந்து, பஸ்ஸில் கோத்தகிரியிலுள்ள பள்ளிக்குச் செல்வான்.

குள்ளங்கரையில் தேயிலைத் தோட்டமும் காப்பித்தோட்டமும் இருந்தன. சுற்றுப்புறங்களில்



கரடி ஒரு தடவை வாங்கிக் கொண்டது.

மலைகளும் அடர்ந்த சோலைகளும் நீர் வீழ்ச்சிகளும், பெரிய பாறைகளும் நிறைந்த அழகிய காட்சிகள். சோலைகளில் கரடிகள் அதிகம் வசித்தன. மழைக்காலங்களில் சோலைகளில், கரையான் புற்றுக்களைத் தோண்டித் தின்பதற்காகக் கரடிகள் வருவதுண்டு. நந்தன் குள்ளங்கரை ஒற்றையடிப் பாதையில், ஆங்காங்கே கரடிகளின் காலடிச் சுவடுகளைக் கண்டிருக்கிறான்.

"திடீரென்று கரடி வந்தால் என்ன செய்வாய்?" என்று ஒரு நாள் நந்தனை அவன் சின்னம்மாள் கேட்டாள்.

"அதற்குத்தான் நான் பள்ளிக்கூடம் போகும்போதெல்லாம், இந்த இரண்டு தடிகளைக் கையில் எடுத்துக்கொண்டு செல்கிறேன்" என்று அவன் பதில் உரைத்தான். நந்தனின் சிற்றன்னை ஒரு நகரத்துப் பெண். ஆகையால் நந்தன் கூறியதை அவளால் அறிந்து கொள்ள முடியவில்லை.

"இரண்டு கொம்புகளிலிருந்தால் என்ன செய்ய முடியும்?" என்றாள் அவள்.

"இல்லை சின்னம்மா! என் அம்மா இதே ஊரில் பிறந்தவள். அவளுக்குக் கரடி விஷயங்களெல்லாம் நன்றாகத் தெரியும். கையில் இரண்டு கொம்புகளிருந்தால், கரடியிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம். கரடிகள் எப்பொழுதும் மரத்தின் பொந்துகளில் குடி இருக்கும். கரடி வந்ததும் நாம் ஓடக்கூடாது. மரத்திலே கரடி தலைகீழாகத்தான் ஏறும். மறுபடியும் இறங்குதற்குத் தெரியாமல், பொத்தென்று புளி மூட்டையைப்போல், முதுகுப் பக்கமாக, எவ்வளவு உயரமிருந்தாலும் விழுந்துவிடும். கரடி மனிதர்களைத் தின்னாது. ஆனால் துண்டு துண்டாகக் கிழித்துப் போட்டுவிடும். கரடியுடன் ஒரு மிருகம் குறித்த நேரத்திலே சண்டை செய்து, ஓடிவிட்டால் மறுநாளும் அதே இடத்தில், அதே நேரத்திலே கரடி வந்து காத்திருக்கும் சுபாவமுள்ள மிருகம். வஞ்சனையைத் தீர்த்துக் கொள்ளும் மிருகங்களில் கரடியும் ஒன்று. நெருப்பு ஒன்றுக்குத்தான் கரடி நடுங்கி ஓட்டம் பிடிக்கும்.

"கரடி மனிதர்கள் வரும், சப்தத்தைக் கேட்டு விட்டால், உடனே பக்கத்திலே இருக்கும் புதர்களில் ஒளிந்துகொண்டு அருகில் வந்ததும் சண்டைக்கு நிற்கும்" என்று தன்னுடைய தாயார் கூறியதைத் தன் சின்னம்மாளிடம் கூறினான் நந்தன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையிலே எல்லாரும் சந்தைக்குப் புறப்பட்டார்கள். ஞாயிறுதோறும் சந்தை கூடுவது கோத்தகிரியில் தான். ஆகையால் காலையிலே புறப்பட்டால், சாதாரணமாய்

மாலையில் தங்கள் வீடு வந்து சேரு வார்கள். அன்று சின்னம்மா, நந்தன் இன்னும் அக்கம் பக்கத்திலே இருந்தவர்களில் சில மங்கையர்களும் காலை எழு மணிக்கெல்லாம் சந்தைக்குப் போகப் புறப்பட்டார்கள்.

நந்தன் என்றும்போலவே தன்னுடைய சாரணர் தடியைத் தூக்கிக் கொண்டான்.

“சந்தைக்குப் போகும்போது, தடி எல்லாம் எதற்கு? திரும்பி வரும்பொழுது சந்தையில் வாங்கும் சாமான்களை வேறு தூக்கிவர வேண்டுமே!” என்றாள் சின்னம்மா. “ஆமாம், அது உண்மைதான்” என்றார் அப்பா. “தடி இல்லாமல் வெளியில் போக வேண்டாம் என்று அம்மா சொல்லி இருக்கிறாள். ஆகையால் தடியில்லாவிட்டால், நான் சந்தைக்கே வரவில்லை” என்றான் நந்தன்.

“எப்படியோ போகட்டும்” என்றார் வாசன். நந்தன் சந்தோஷமாகத் தடியுடன், தன் தாயாரின் புகைப்படத்தை உற்றுநோக்கி வணங்கினான். கண்ணீர் கன்னத்தின் வழியே ஓடி வந்தன.

‘நானும் உன்னுடன் வருகிறேன். கண்ணீர் விடவேண்டாம் மகனே!” என்று தாய் கூறுவதைப்போல் ஓர் உணர்ச்சி அவன் உள்ளத்திலே தோன்றியது.

எல்லோருடனும் நந்தன் புறப்பட்டான். சோலைகள் நிறைந்த ஒற்றையடிப் பாதையிலே நந்தன் தான் முதலில் நடந்துசென்றான்.

என்றும் போல் கரடிகளின் நடமாட்டம் வழியில் அன்று அதிகமாகவே இருந்தது. பாதிதூரம் சென்றதும் திடீரென்று, “குர்—குர்” என்ற சப்தம் கேட்டது. எல்லாரும் சுற்று முற்றும் பார்த்தார்கள். முன்னால் ஒரு பெரிய கரடி இவர்களை நோக்கி வருவது தெரிந்தது.

எல்லாரும், “ஓ” வென்று அலறிவிட்டார்கள். நந்தன் கையிலிருந்த தடியை அதன் கையில் கொடுத்தான்.

வாத்தியார்: ஏண்டா, பரீட்சையிலே இருபத்தைந்து மார்க் தானே வாங்கியிருக்கே? எப்படிப் பாஸாகும்?

பையன்: நம்பி மோசம் போயிட்டேன், ஸார்! நீங்க சொல்லிக்கொடுத்ததே சரின்னு இருந்திட்டேன், ஸார்!

—ரத. ரமி. கோட்டை.

கரடி தடியைப் பிடித்துக் கொண்டது.

"கோல் சுழற்று" விளையாடுவதைப் போல், விளையாடிக் கொண்டே நந்தன் சாமர்த்தியமாகப் பின்வாங்கினான். கோல் விளையாட்டில் மனிதர்கள் எப்படி மாற்றி அடிக்கிறார்களோ, அப்படியே கோலால் அடித்துக் கொண்டே அவனுடன் தொடர்ந்து வந்தது கரடி.

கரடியுடன் போர் செய்து கொண்டே பின்வாங்கினான்.

அதற்குள் திரும்பி வீட்டுக்கு ஓடின பையன்கள் மூலம் விஷயத்தைக் கேள்விப்பட்ட பெரிவர்களும், தேயிலைத் தோட்டத்துக் கூலியாட்களும் தடிகளுடனும் தீப்பந்தங்களுடனும், "ஓபா—போ" என்று காட்டு பாஷையில் கூவிக்கொண்டே வந்தார்கள். அந்தச் சப்தத்தைக் கேட்டு, கரடி ஓட்டம் பிடித்தது.

ஒரு வாரம் கழித்து, ஒரு நாள் காலை நந்தன் பள்ளிக்கூடம் போகப் புறப்பட்டான். அன்று ஒரு தடியுடன் தான் சென்றான்.

அதே இடத்துக்கு வந்ததும், அவன் புதரில் ஏதோ சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தான். கரடி ஒரு கொம்புடன் பின்னால் வருவது தெரிந்தது. நந்தனுக்குப் பயம் தாங்கவே முடியவில்லை. கரடிக்கும் நந்தனுக்கும் கோல் விளையாட்டு ஆரம்பமானது. நந்தன் சோர்ந்து விட்டான். "ஓபா—போ" வென்று சில குரல்கள் கொடுத்தான். "டுமீல்" என்று ஒரு சப்தம் கேட்டது. அதே நேரத்திலே கரடியும் 'குர்ர்' என்று தரையில் சாய்ந்தது.

நந்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தேயிலைச் செடிகளின் மறைவிலிருந்து துப்பாக்கியுடன், அந்தத் தேயிலைத் தோட்டத்துச் சொந்தக்காரர் ஒருவர் வருவதைக் கண்டு அவரை வணங்கினான்.

"உன் விஷயம் கேள்விப்பட்டு, நான் ஒரு வாரமாகத் துப்பாக்கியுடன் வருகிறேன். இன்று உன்னுடைய மோப்பத்தைக் கண்டதும் வெளியில் வந்தது கரடி. நான் வராமலிருந்தால் கட்டாயம் உன்னைக் கொன்றிருக்கும்" என்று கூறினார் அவர். "தெய்வமாக இருக்கும் என்னுடைய அம்மா தான் உங்களை அனுப்பினாள்" என்று நன்றி கூறினான் நந்தன்.

ஜயமணி

பி. கே. தேவராஜுலு

1

அந்தக் காலத்தில் ஜயமணி கோயமுத்தூர் பிராந்தியத்திலேயே பிரசித்தி பெற்ற ஒரு பெரிய கொள்ளைக்காரன். அவனுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் அழுதபிள்ளையும் வாயை மூடும். ஜயமணி கொள்ளையடிக்க நிச்சயித்திருக்கும் வீட்டு எஜமானருக்குக் கொள்ளையடிப்பதற்கு இரண்டு தினம் முன்னாலேயே தகவல் அனுப்பி விட்டுத்தான் திருடுவான். இவ்வளவு பகிரங்கமாகக் கொள்ளைகளை நடத்தியும் அவனை யாராலும் பிடிக்க முடியவில்லை.

ஜயமணியைப் பிடிக்கப் போலீஸார் செய்த முயற்சிகள் ஒன்றும் பயனளிக்கவில்லை. அவன் எங்கிருந்து வருகிறான், எங்கே போகிறான் என்று ஒருவராலுமே கண்டுபிடிக்க முடியவில்லை. அவன்

கூட்டாளியாக வேறு யாரையும் சேர்த்துக் கொண்டதாகவும் தெரியவில்லை. அதனால் ஜயமணியைப் பற்றிய ஒரு சிறிய உளவைக் கூடப் போலீஸ்காரர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை.

இப்படியே எத்தனை காலம் தப்பித்துக்கொண்டு திரிய முடியும்? பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுத்தானே தீரவேண்டும்?

2

அன்று கோயம்புத்தூரில் திவான் பகதூர் பொன்னம்பலம் பிள்ளை மத்தியான்னம் சாப்பிட்டபின் வெற்றிலை போட்டுக்கொண்டு தாழ்வாரத்திலிருந்த சோபாவில் சாய்ந்திருந்தார். அந்தச் சமயத்தில் தபால்காரன் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டுச் சென்றான். கடிதத்தைப் பிரித்துப் பிள்ளைவாள் படித்தார்.

“திவான் பகதூர் பொன்னம்பலம் பிள்ளை அவர்களுக்கு: நான் உம்முடைய பங்களாவில் மார்ச்சு மாதம் பதினைந்தாம் தேதி இரவு 10 மணிக்குக் கொள்ளையடிக்கப் போகிறேன்.

இங்ஙனம்,
ஜயமணி.”

படித்து முடிந்ததும் பொன்னம்பலம் பிள்ளைக்குக் கை கால்கள் நடுக்கம் எடுத்துக் கொண்டன. கையிலிருந்த கடிதம் நழுவிக் கீழே விழுந்தது. பிறகு ஒருவாறு தைரியப்பபடுத்திக் கொண்டு கடிதத்தை எடுத்துக்கொண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டை நோக்கிப் போனார்.

கடிதத்தை இன்ஸ்பெக்டருக்குக் காட்டி இருபத்தைந்து போலீஸ்காரர்களை, கொள்ளை நடக்கும் தினத்தன்று பந்தோபஸ்துக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டு வந்து விட்டார்.

பதினைந்தாம் தேதி வந்தது. இரவு எட்டு மணிக்கே போலீஸ்காரர்கள் தயாராய் இருந்தார்கள். பொன்னம்பலம் பிள்ளை தூங்காமல் இரும்புப் பீரோவைக் காத்துக் கொண்டிருந்தார்.

சரியாக மணி பத்து இருக்கும். இருந்தாற்போல் திடீரென்று பொன்னம்பலம் பிள்ளைக்கு எதிரில் நீட்டிய ரிவால்வருடன் நின்று கொண்டிருந்தான் ஜயமணி. பொன்னம்பலம் பிள்ளையின் உடல் கிடு கிடுவென்று நடுங்கியது.

“எடு சாவியை!” என்று வீர கர்ஜனை கர்ஜித்தான் ஜயமணி. பிள்ளைவாளின் கை தானாக இடுப்பிலிருந்த சாவியைத் தேடி எடுத்துக் கொடுத்தது. சாவியை வெடுக்கென்று பிடுங்கிக்கொண்டு பீரோவின் ரகசிய அறையைத் திறந்து, நோட்டுக் கற்றைகளையும் நகைகளையும் எடுத்துத் தன் தோல் பையில் போட்டுக் கொண்டான் ஜயமணி. பிறகு பொன்னம்பலம் பிள்ளைக்கு நேராக எதிரே ரிவால்வரை நீட்டினான்.

“டுமீல், டுமீல்!”

பொன்னம்பலம் பிள்ளை திகிலுடன், “ஐயோ, அப்பா!” என்று கத்திக்கொண்டு கீழே சாய்ந்தார். வேட்டுச் சத்தம் போலீஸார் காதுகளில் விழவும் ஏதோ ஆபத்து நடந்து விட்டது என்று மேல் மாடியை நோக்கிப் படிகளில் பாய்ந்து ஏறினார்கள்.

ஜயமணி போலீஸார் வரட்டும் என்று காத்துக்கொண்டிருப்பானா? ஒரே ‘ஜம்ப்!’ மேல் மாடியி

லிருந்து கீழே குதித்தான். பூச்செடிகள் மறைவில் ஒளித்து வைத்திருந்த மோட்டார் சைக்கிளை எடுத்து 'ஸ்டார்ட்' செய்து கொண்டிருந்தான்.

போலீஸார் மேல் மாடியில் சென்று பார்க்கும் போது பொன்னம்பலம் பிள்ளை தரையில் மூர்ச்சித்து விழுந்து கிடந்தார். அவர் தோள்பட்டையிலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. மோட்டார் சைக்கிளின் சப்தம் போலீஸார் காதுகளில் விழவும் எல்லாரும் கீழே இறங்கினர்கள். அதற்குள் மோட்டார் சைக்கிள் காற்ருகப் பறந்துகொண் டிருந்தது. போலீஸார் தாம் வந்த லாரியில் ஏறிக் கொண்டு பின்தொடர்ந்தார்கள்.

3

நிலவு பட்டப் பகல் போல் வீசிக்கொண் டிருந்தது. மோட்டார் சைக்கிள் மேட்டுப்பாளையம் ரோட்டில் வாயுவேகம் மனோ வேகமாய்ப் பறந்துகொண் டிருந்தது. போலீஸ் லாரியும் பின் தொடர்ந்து துரத்திக்கொண்டே சென்றது.

மோட்டார் சைக்கிள் பெரிய நாயக்கன்பாளையத்தை அடைந்ததும், மேற்கு முகமாகத் திரும்பி விட்டது. போலீஸ் லாரியும் அதே திசையில் திரும்பியது. மோட்டார் சைக்கிள் பாலமலை அடிவாரத்தை அடைந்ததும் நின்றது. ஜயமணி சைக்கிளை விட்டுக் கீழே இறங்கி மோட்டார் சைக்கிளைப் பக்கத்திலிருந்த குழியில் தள்ளிவிட்டுப் பாலமலை கோவிலுக்குப் போகும் பாதையில் மேலே ஏறினன். போலீஸ் லாரி அடிவாரத்தில் நின்று கொண்டது. போலீஸ்காரர்கள் லாரியை விட்டு இறங்கி அதே பாதையைப் பின் தொடர்ந்து நடந்தார்கள். அரை மைல் சென்றிருப்பார்கள். ஜயமணியைக் கண்ணில் காணவில்லை.

முன்னல் சென்ற ஜயமணி ஒரு திருப்பத்தில் திரும்பும்போது ஒருசெடி மறைவில் ஒளிந்துகொண்டான். போலீஸ்காரர்கள் போன பின் அவர்களுக்குப் பின்னல் சென்ருன்.

இப்படியே போய்க்கொண் டிருக்கும்போது திடீரென்று பின்னிருந்து, 'டுமீல், டுமீல்' என்று இரண்டு ரவைகள் வெடித்தன.

முதல் கள்ளன்: என்ன அண்ணே, இங்கே நீ எப்படி வந்தே?

இரண்டாமவன்: ஒரு பெண்ணின் காதை முறுக்கினேன்.

முதல்வன்: அதுக்காகவா நீ இங்கே வந்தே?

இரண்டாமவன்: அந்தக் காதை முறுக்கினதும் லோலக்குக் கையோடு வந்துட்டுது!

—வி. பாபுராஜேந்திரன், பாளையங்கோட்டை.

ஜயமணி ஆவென்று கதறிக் கொண்டு கீழே சுருண்டு விழுந்தான். 'டுமீல்' சப்தத்தைக் கேட்டதும் முன்னால் சென்ற போலீஸ்காரர்களும் திரும்பிப் பின்னால் வந்தார்கள்.

ஜயமணி கீழே கிடந்த இடத்தில் போலீஸ்காரர்கள் துப்பாக்கிகளுடன் சூழ்ந்து நின்றுகொண்டிருந்தார்கள். பின்னால் தங்கியிருந்து சுட்ட போலீஸாரும் வந்து சேர்ந்தனர். ஜயமணியைத் தூக்கிக் கொண்டு போய் லாரியில் வைத்துக்கொண்டு கோயம்புத்தூரை அடைந்தார்கள். ஜயமணியின் உயிர் ரத்த வெள்ளத்தில் ஊசலாடிக்கொண்டிருந்தது.

4

மறுநாள் காலை. ஜயமணியின் ஆவி இரவே பிரிந்துவிட்டது. போலீஸ்காரர்கள் இறந்த ஜயமணியை இன்ஸ்பெக்டர் முன் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். இன்ஸ்பெக்டர் ஜயமணியைச் சோதனை செய்தார். சோதனை செய்தபோது அவன் பையிலிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அந்தக் கடிதத்தை இன்ஸ்பெக்டர் எல்லோர் முன்னிலையிலும் படித்தார். அந்தக்கடிதத்தில் பின்கண்டவாறு எழுதியிருந்தது.

* * *

பொது ஜனங்களுக்கும்சர்க்காருக்கும் என்கடைசிவேண்டுகோள்:

முதலில் நான் ஒரு பெண் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் ஆண் வேடம் தரித்து ஜயமணி என்ற பெயருடன் கொள்ளையடித்தேன். ஏன் என்று கேட்பீர்கள்! என் கதையைக் கேளுங்கள்.

நான் கோயம்புத்தூரில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்தவள். நான் சிறுவயதாய் இருக்கும்போதே என் தாய் இறந்தாள்.

பிறகு என் தகப்பனார்தான் என்னை வளர்த்துப் படிக்க வைத்தார். எனக்குப் பதினாறு வயதில் என் தகப்பனாரும் இறந்தார். நான் அநாதை ஆனேன். திவான் பகதூர் பொன்னம்பலம் பிள்ளையின் மகன் என்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று என்னை ஏமாற்றிவிட்டான். அதற்குப் பிறகு நான் அநேக அபாயங்களினின்றும் தப்பி, பிறகு பால

மலையை அடைந்தேன். வஞ்சம் தீர்க்க, உழைத்துப் பாடுபட முடியாமல் சிறு திருட்டில் இறங்கினேன். அதுவே பெரிய கொள்ளைக்காரியாக என்னை ஆக்கியது. ஆண் உடையில் கொள்ளையடிக்க ஆரம்பித்தேன்.

பெரியநாயக்கன்பாளையத்திற்கு மேற்கில் நாலரைமைல் தூரத்தில் பாலமலை இருக்கிறது. மலையில் உள்ள ரங்கநாதர் கோவிலுக்குப் போகும் வழியில் தண்ணீர்ப் பந்தல் ஒன்று இருக்கிறது. அதற்குப்பின்னுல் ஒரு குகைஇருக்கிறது. அந்தக் குகையின்மேல் ஒரு பெரிய கல் மூடப்பட்டிருக்கும். கல்லின்மேல் ஜயமணி என்று எழுதியிருக்கும். அதனுள்ளேதான் நான் கொள்ளையடித்த நகையும் பொருள்களும் இருக்கின்றன. எனக்கு ஒருவித ஆபத்தும் வராவிட்டால் நான் மீண்டும் குடும்ப வாழ்க்கையிலேயே இருப்பேன். இந்தக் கடிதம் என் உயிர் உள்ளளவும் ஒருவரிடமும் கிடைக்காது. அப்படிக் கிடைத்தால் அந்தக் குகையிலுள்ன நகைகளையும், பொருள்களையும் எடுத்து ஒரு தொழிற்சாலை கட்டி அதில் சுற்றுவட்டாரங்களில் உள்ள பாமர மக்களை வேலையில் சேர்த்துக் காப்பாற்றுமாறு வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
ஜயமணி.''

இன்ஸ்பெக்டர் படித்து முடித்த பின் ஜயமணியின் உடலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்ய ஏற்பாடுகள் செய்தார்கள்.

5

அதற்கு அடுத்த வருஷம் 'ஜயமணி மில்ஸ்' எனும் பெயருடன் ஒரு பெரிய பஞ்சாலை ஒன்று நிறுவப்பட்டது. சுற்று வட்டாரத்திலுள்ள பாமர மக்கள் லக்ஷக்கணக்கில் வேலை செய்து ஜீவித்து வந்தார்கள். அதை நிறுவியவர் யார் தெரியுமா? முன்பு திவான் பகதூராக இருந்த ஸ்ரீ பொன்னம்பலம் பிள்ளை அவர்கள்தான்! அவருடைய சொந்தப் பணத்தைப் போட்டு அந்தத் தொழிற்சாலையை நிறுவினர்.



மருந்துக்கடை மல்லப்பர்

என். தேவாம்சம்

குட்டியானையைப்போலப் பெருத்த தேகம்; ஆனால் தலையோ மிகச் சின்னது. இந்த அதிசய உருவத்தைப் படைத்தவர் தான் மண்டைவீங்கி மல்லப்பர்.

'என்னடா தலை சிறியது, ஆனால் பெயரோ மண்டைவீங்கி!' என்று நினைக்கிறீர்களா? காரணம் கடைசியில் தெரியும்.

அந்த ஆசாமியின் கண்களுக்கு யாராவது நன்றாக வாழ்வது படக் கூடாது. அப்படிப் பட்டுவிட்டாலே மல்லப்பரின் மண்டை வீங்கிவிடும்; பொறாமையினால் தான்!

'அடேயப்பா, இந்த வருஷம் அடுத்த வீட்டு அப்பாசாமிக்கு எவ்வளவு நெல் விளைந்திருக்கிறது! குண்டுசெட்டி குமாரவேலுவுக்கு நாற்பது ஆடுகள் இருக்கிறதாமே!' இப்படியெல்லாம் நினைத்து எங்கி எத்தனையோ தடவை மல்லப்பர் மண்டை வீங்கியிருக்கிறார்.

மல்லப்பர் மருந்துக் கடை வைத்திருந்தார். ஏதோ கடையும் சாகாமல் செத்துக்கொண் டிருந்தது. மல்லப்பர் அடிக்கடி மற்றவர்களைப் பார்த்து மண்டை வீங்குவதினாலேயோ என்னவோ அவருக்கு அடிக்கடி மண்டை வலிப்பது வழக்கம். இது இன்று நேற்றைய நோய் அல்ல. எத்தனையோ வருஷங்களாக மண்டைவலியில் அழுந்திய சர்விஸ்காரர்தான் மல்லப்பர்.

ஒரு நாள் அவருடைய மனைவி, "நீங்கள் மருந்துக் கடை வைத்திருக்கிறீர்களே. உங்கள் மண்டை வலிக்கு ஒரு மருந்து கிடைக்கவில்லையா?" என்று கேட்டுவிட்டாள். அதற்கு மல்லப்பர், "இப்பொழுது மண்டை வலிக்கு மருந்து பார்க்காதது தான் குறையாயிருக்கிறது. கோடிவீட்டுக்குப்புசாமியைப் பார். அவனுக்குக் காலிலே ஒரு சிலந்தி வந்தது. அவன் மருந்து போட்டுக்கொண்டானா, என்ன? சிலந்திப்புண் தானாகவே ஆறிவிட்டதே! மருந்து கொடுக்கிற சாமி மண்டையிலே அடிச்சுக் கொடுக்கும். எனக்கும், நான் தலையைப் போடுகிறதற்குள் (சாவதற்குள்) எப்படியும்

ஒருவாறு மல்லப்பர் மண்டையை அழுத்திப் பிடித்து விட்டுக் கொண்டு பர்ஸில் கையைவிட்டார். சில்லறையாக எட்டணு இருப்பதைக் கண்டவுடன் மல்லப்பரின் மண்டை மயிர் சிலிர்த்து விட்டது. ஆனுலும் அவர் மண்டையிலுள்ள களி - இல்லை, இல்லை; மூளை அதிதீவிரமாக யோசித்தது. பிறகு மருந்துக் கம்பெனிக்குக் கீழ் வருமாறு கடிதம் எழுதினர்:

"ஐயா, தங்கள் பெயர் பெற்ற மண்டை வலி மருந்தைப்பற்றிப் படித்தேன். ரொம்பச் சந்தோஷம். எனக்கே நீண்ட நாளாக மண்டை வலி இருந்து வருகிறது. ஆகவே இத்துடன் 5 ரூபாய் செக் அனுப்பியுள்ளேன். ஒரு பாட்டில் அனுப்பி வைக்கவும். பிறகு மருந்தின் அருமை தெரிந்துகொண்டு கடைக்கு வேண்டிய மருந்துக்கு எழுதுகிறேன்.

—இப்படிக்கு மண்டை வலி மருந்தை நோக்கி மண்டைவீங்கிக் கிடக்கும் மல்லப்பர்."

குறிப்பு: இந்த லெட்டரை எழுதும்போது என் மண்டை வலித்ததால் இத்துடன் செக் வைக்க மறந்துவிட்டேன். எவ்வளவோ பெயரும் புகழும் பெற்ற கம்பெனிக்காரர்களாகிய நீங்கள் இதை ஒரு பொருட்டாக நினைக்கமாட்டீர்களென்று நம்புகிறேன்.

மண்டைவலி தீர்ந்துபோகும்' என்று ஏதோ உளறிக்கொட்டி, தன் மனைவியைச் சமாதானப் படுத்தி விட்டார் மண்டை வீங்கி மல்லப்பர்.

* * *

அன்று கடைக்கு வந்த தபால்களை மல்லப்பர் பிரித்துக்கொண்டிருந்தார். அதில் ஒன்று பிரபல அரோகரா மருந்துக் கம்பெனியிலிருந்து வந்திருந்தது. உடனே மண்டை வீங்கி அவசர அவசரமாக அந்தக் கடிதத்தைப் பிரித்து வாசித்தார்.

"என்னதான் நாள் பட்ட மண்டை வலியிருந்தாலும் பத்து நிமிஷத்தில் எங்கள் மருந்து குணமாக்கும்." இதைப் படித்தவுடனே மல்லப்பரின் மண்டை சந்தோஷத்தால் வீங்கியது. ஆனல் மறு விநாடியே வீங்கிய மண்டை சுக்குச் சுக்கலாய் நொறுங்குவது போலிருந்தது. காரணம் கடிதத்தின் அடியில் ஒரு மருந்துப் பாட்டில் விலை 5 ரூபாய் என்று போட்டிருந்ததுதான்.

* * *

இரண்டு தினங்களாகத் தபால்காரரை நோக்கி மண்டை வீங்கிக் கிடந்த மல்லப்பருக்கு அன்று ஒரு பார்சல் வந்தது.

தம் சாமர்த்தியத்தைத் தாமே புகழ்ந்துகொண்டு பார்சலைப் பிரித்தார். அதில் ஒரே ஒரு கடிதம் மட்டும் இருந்தது.

"மருந்தை ஆவலோடு நோக்கி மண்டை வீங்கிக் கிடக்கும் மல்லப்பருக்கு: ஐயா, தங்கள் ஆர்டரின்படி ஒரு பாட்டில் மண்டை வலி மருந்தை இத்துடன் அனுப்பிவைக்கிறோம்.

"குறிப்பு: இத்துடன் மருந்துப் பாட்டிலை வைக்க மறந்துவிட்டோம். அதற்குக் காரணம் உங்களுக்கு நாங்கள் அனுப்ப நினைத்த பாட்டிலின் அபார சக்திதான். எங்களையும் உங்களைப்போல் மறக்கச் செய்துவிட்டது அது. பரவாயில்லை. எத்தனையோ நாட்களாய் மண்டை வலியைப் பொறுத்துக் கொண்டிருக்கும் மண்டை வீங்கியான நீங்கள் இதை ஒரு பொருட்டாக நினைக்கமாட்டீர்களென்று நம்புகிறோம். - இப்படிக்கு, அரோகரா கம்பெனியர்!"

இதைப் படித்தவுடன் மல்லப்பரின் மண்டை மேலும் வீங்கிவிட்டது. தடாலென்று கீழே விழுந்து சோர்ந்துபோனார் மல்லப்பர்.

விருந்து

ஒரு குடியானவன் தன் சிநேகிதனைப் பார்க்கப் பக்கத்து ஊருக்குப் போனான். அவனுடன் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டதால் வீட்டுக்குத் திரும்பும் பொழுது இருட்டிவிட்டது. ஆகையால் அங்கேயே இரவு சாப்பிட்டுவிட்டு, காலையில் புறப்படலாமென்று தங்கிவிட்டான். வீட்டுக்காரன் வந்த விருந்தாளியை வீட்டில் வைத்துவிட்டுக் கடைக்குக் கறிகாய் வாங்கிவரப் போனான். வீட்டுக்காரனின் மனைவிக்கு விருந்தாளி தங்கியது பிடிக்கவில்லை. மிகுந்த ஆத்திரம் கொண்டாள்.

வாசல் திண்ணையில் வந்து பார்த்தாள். வெளிச்சம் மங்கலாகத்தான் இருந்தது. தாங்க முடியாத ஆத்திரத்தோடு அங்கே உட்கார்ந்திருந்தவனுடைய மீசையை இரண்டு கையாலும் பிடித்து உலுக்கி, "விருந்தினர்களை அழைத்துக்கொண்டு வராதே என்று எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன்? இனிமேல் இந்தமாதிரி செய்வாயா?" என்று அதட்டினாள்.

அவனுக்கு வலி தாங்க முடியவில்லை. பாவம், என்ன செய்வான்? "ஐயோ, வலி உயிர் போகிறதே. இனிமேல் இந்தப் பக்கமே தலை காட்டவில்லை" என்று அலறினான்.

கையில் பையுடன் வீட்டுக்காரன் வந்தான். "வந்த நண்பன் எங்கே?" என்று மனைவியிடம் கேட்டான். உடனே வெட்கமும் பீதியும் கொண்டாள் அவள். உடலெல்லாம் வேர்த்துக் கொட்டியது. காரணம் திண்ணையில் இருந்தவன் தன் புருஷனில்லை யென்றும் அவன் விருந்தாளி யென்றும் தெரிந்ததுதான். "உன் நண்பன் விருந்து உபசாரத்தைக் கண்டு பயந்து ஓடிவிட்டான்" என்றாள் சாமர்த்தியமாக. விருந்தாளியும் 'மீசை போனாலும் தாடியாவது பிழைத்ததே' என்று இருளில் மறைந்து சென்றான்.

—விஜி. பம்பாய்.

இரு நண்பர்கள்

எஸ். பானுமதி

உதயபுரியை உதயபானு என்ற ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு ஜயபானு என்றொரு புத்திசாலி மந்திரி இருந்தான். குடிமக்கள் சந்தோஷமாய் இருந்து வந்தனர். அரசனுக்கு ரதன் என்றொரு மகனும் கமலினி என்று ஒரே மகளும் இருந்தார்கள். மந்திரிக்கும் விமல் என்றொரு மகன் இருந்தான். ரதனும் விமலும் இணைபிரியாத் தோழர்கள். சிறந்த அறிவாளிகள். சிறந்த போர் வீரர்கள். சண்டை செய்வதிலும், வேட்டையாடச் செல்வதிலும் விருப்பமுள்ளவர்கள்.

இப்படியிருக்கையில் ஒரு சமயம் ஒரு பெரிய பாம்பு, நகரத்திற்குள் இரவில் வந்து, மனிதர்களைக் கொன்றுகொண்டிருந்தது. அப்பெரிய பாம்பைக் கொல்பவர்களுக்குத் தன் மகளை மணம் செய்வித்து அநேக பரிசுகளும் வழங்குவதாக அரசன் அறிவித்தான்.

ஆனால் யாருமே முன்வரவில்லை. ரதனும் விமலும் தாங்கள் போய் அந்தப் பாம்பைக் கொன்றுவிட வேண்டும் என்று விரும்பினர். அரசன் அநுமதிக்கவில்லை. ஆகவே அவர்கள் அரசனிடம் சென்று, தாங்கள் வேட்டையாடப் போவதாய்க் கூறிவிட்டுக் கிளம்பினர். அரசன் அவர்களை இருட்டுவதற்குள் வந்துவிட வேண்டும் என்று எச்சரிக்கை செய்து, படைவீரர்களைத் துணைக்கு அனுப்பினான். ஆனால் ரதனும் விமலும் பாதித்தூரம் சென்றவுடன் படை வீரர்களைத் திருப்பி அனுப்பிவிட்டு, தனியாகவே காட்டை அடைந்தார்கள்.

இரவு அங்கேயே தங்கி இருக்க விரும்பினார்கள். ஒருவன் படுத்துத் தூங்கும்பொழுது மற்றவன் காவல் காக்க வேண்டும் என்று திட்டம் போட்டுக்கொண்டு ஆகாரத்தை உண்டார்கள். தங்கள் தீர்மானத்தின்படி மரத்திலேறிப் படுத்தனர். ரதன் தூங்கினான். விமல் விழித்துக்கொண்டு, கையில் கத்தியுடன் காவல் காத்தான்.

நடுநிசியில், காரிருளில் ஓர் ஒளி தெரிந்தது. விமல் அதைக் கவனித்துவிட்டான். உடனே இலைகளின் மத்தியில் ஒளிந்துகொண்டு, நடப்பதைக் கவனித்தான். ஒரு பெரிய பாம்பு தலையில் மாணிக்கத்தை வைத்துக்கொண்டு, அவர்கள் இருந்த மரத்தடிக்கு வந்தது. ஒளியுடன் பிரகாசித்துக்கொண்டிருக்கும் மாணிக்கத்தைத் தலையிலிருந்து இறக்கி வைத்தது. பிறகு நகரத்தை நோக்கிச் சென்றது. அவர்கள் கொல்ல வந்த பாம்பு இது தான் என்று நிச்சயித்துக்கொண்டான் விமல். உடனே கீழே இறங்கி, களிமண்ணினால் அந்த மாணிக்கத்தை மறைத்தான். பிறகு மரத்திலேறி உட்கார்ந்துகொண்டான். மனிதர்களைக் கொன்று

விட்டு, நகரத்திலிருந்து திரும்பி வந்தது பாம்பு.

மாணிக்கத்தைக் காணுமல் காடு முழுவதும் தேடிற்று. பிறகும் அது கிடைக்காததால், அந்த மரத்தை மூன்று முறை சுற்றிவிட்டு இறந்துவிட்டது. விமல் நடந்ததைக் கவனித்துக்கொண்டே இருந்தான். உடனே கீழே இறங்கி வந்து, அப்பாம்பைத் தன் கத்தியால் வெட்டினுன். ரதனை எழுப்பி நடந்ததைச் சொன்னுன். பிறகு இருவருமாகச் சேர்ந்து அந்த மாணிக்கத்தைக் கழுவுவதற்காக அருகிலிருந்த குளத்திற்கு எடுத்துச் சென்றனர்.

அந்த மாணிக்கத்தைக் குளத்தில் அலம்பியபொழுது, ஒரே வெளிச்சம் உண்டாகி, குளத்தினுள் இருந்த பொருள்களெல்லாம் நன்கு தெரிய ஆரம்பித்தன. அங்கே ஒரு பெரிய மாளிகையைக் கண்டனர். அது நவரத்தினங்களாலும் வைர வைடூரியம் முதலிய விலை மதிக்க முடியாத கற்களினுலும் இழைக்கப்பட்டிருந்தது. உடனே குளத்தினுள் இறங்கி, அந்த மாளிகையை நோக்கி நடந்தார்கள். மாளிகையின் அழகிய கதவைத் திறந்துகொண்டு உட்சென்றனர். அதனுள் அநேக அறைகள் இருந்தன. ஒவ்வோர் அறையிலும் விலை மதிக்க முடியாத வைரம், மாணிக்கம் முதலிய கற்கள் குவிந்திருந்தன. அவற்றைப் பார்த்துக்கொண்டு, மாளிகையின் கடைசிப் பாகத்தை அடைந்தனர். அங்கே ஓர் அதிசயக் காட்சியைக் கண்டார்கள்.

ஓர் அழகான பெண், தங்கக் கட்டிலில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். மனித சஞ்சாரமற்ற அந்தக் குளத்தினுள் இருந்த மாளிகையில் உள்ள அவளைப் பார்த்தவுடன் அவர்கள் திடுக்கிட்டார்கள். இவர்களுடைய காலரவம் கேட்டு விழித்துக்கொண்டாள் அந்தப் பெண். பிறகு பயத்துடன் அவர்களை நோக்கி, "நீங்கள் யார்? எப்படி இங்கே வந்தீர்கள்? எதற்காக வந்தீர்கள்?" என்று வினவினுள். அவர்கள் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டார்கள். அந்தமாளிகையானது ஒரு பாம்பினுடையது என்றும், அந்தப் பாம்புக்கு மனிதர்களைக் கண்டாலே பிடிக்காது என்றும் அவள் கூறினுள். உடனே விமல் அந்தப் பாம்பைக் கொன்றுவிட்டதாகக் கூறினுன்.

ரதன் அந்தப் பெண்ணின் அழகில் மதிமயங்கினுன். தன் பெயர் ரதி என்றும், தான் ஒரு ராஜகுமாரி என்றும், அந்தப் பாம்பினுல் அந்த மாளிகையில் அடைக்கப்பட்டிருப்பதாயும் அவள் கூறினுள். பிறகு எல்லோரும் பாம்புப் பயம் நீங்கிச் சந்தோஷமாக உண்டு உறங்கினுர்கள். மாணிக்கத்தைப் பத்திரப்படுத்திக்கொண்டான் ரதன்.

சில நாட்கள் சென்றன. விமல் உதயபுரி சென்று தகவல் அறிவித்துவிட்டு வருவதாகக் கூறிச் சென்றுன்.

இப்படியிருக்கையில் மகத தேசத்தைச் சேர்ந்த ராஜகுமாரன் ஒருவன், வேட்டையாடுவதற்காகக் காட்டினுள் வந்தான். வெகு நேரம் வேட்டையாடினதில் களைத்துவிட்டான். ரதன் இருந்த குளத்தில் தாகம் தீர்த்துக்கொள்ள விரும்பினுன். அப்பொழுது மாலை நேரமாததால், ரதி முகம் கழுவிக் கொள்வதற்காக வெளிவந்தாள். ராஜகுமா

ரனைக் கண்டவுடன் உள்ளே சென்றுவிட்டாள். இதைக் கவனித்துவிட்டான் ராஜகுமாரன்.

உடனே ராஜகுமாரன் குளத்தில் இறங்கிப் பார்த்தான். தண்ணீர்தான் இருந்தது. ரதி திரும்பி வெளியே வரவேயில்லை. ஆனால் ராஜகுமாரன் குளக்கரையிலேயே அமர்ந்துவிட்டான். "குளத்தில் ஒரு பெண்" என்று பைத்தியம் போல் சொல்லிக்கொண்டேயிருந்தான். ராஜகுமாரனைக் காணுமல் வந்த படைவீரர்கள் அவனை இந்த நிலையில் கண்டார்கள்.

அவர்கள் இவனை நாட்டிற்கு வரும்படி அழைத்தபோது அவன் பதில் சொல்லவில்லை. படைவீரர்கள் அவனை அங்கேயே விட்டுவிட்டுத் தங்கள் அரசனை அழைத்து வந்தனர். மகத அரசனும் அரசியும் தங்கள் மகனை இந்நிலையில் கண்டு மிகவும் வருந்தினர். பிறகு அவனை மிக்க சிரமத்துடன் நாட்டிற்கு அழைத்து வந்தனர்.

பிறகு அந்த மகத அரசன் தன் மகனின் பைத்தியத்தைத் தெளிவிப்பவருக்குப் பாதி ராஜ்யம் அளிக்கப்படும் என்று அறிவித்தான்.

அநேக வைத்தியர்கள் முயன்றார்கள். ஒருவராலும் அந்தப் பைத்தியத்தைப் போக்க முடியவில்லை. ஒரு சுள்ளி பொறுக்கும் கிழவிக்குத் தான் போய் அதைப் போக்க வேண்டும் என்று தோன்றிற்று.

அவள் ரதி இருக்கும் குளத்தினருகில் ஒரு குடிசை அமைத்துக் கொண்டாள். அநேக படைவீரர்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டாள். அவர்கள் ஒவ்வொருவரையும் ஒளிந்துகொள்ளச் செய்தாள். உணவுப் பொருள்களைச் சேர்த்து வைத்தாள்.

ஒரு நாள் ரதி முகம் கழுவ வெளிவந்தாள். இதைப் பார்த்து விட்டாள் கிழவி. மெள்ள அவளருகில் சென்று பேச்சுக் கொடுத்தாள். தினம் இவ்விதம் பேசி, அவள் நட்பைப் பெற்றாள். பிறகு ஒரு தினம் தன் குடிசைக்கு அழைத்துக் கொண்டு வந்தாள். அன்று ரதி அந்த மாணிக்கத்துடன் வந்திருந்தாள். உடனே ஒளிந்திருந்த போர்வீரர்கள் ரதியைச் சூழ்ந்துகொண்டார்கள். ரதியின் கையிலிருந்த மாணிக்கத்தை வாங்கி வைத்துக் கொண்டாள் கிழவி. பிறகு அவளை நாட்டிற்கு அழைத்துச் சென்று, ராஜகுமாரனின் பைத்தியத்தைத் தெளிவித்தாள். ரதி ஒரு மாளிகையினுள் சிறை வைக்கப்பட்டாள்.

இதற்கிடையில் விமல் உதயபுரியிலிருந்து திரும்பி வந்தான். குளத்தின் வெளியிலிருந்து ரதனைக் கூப்பிட்டான். மாளிகையில் படுத்து உறங்கிக்கொண்டிருந்த ரதன் காதில் அந்தச் சத்தம் விழவில்லை. ஆதலின் விமல் கால் போன வழி சென்று ராஜ்யத்தை அடைந்தான்.

நடந்த விஷயங்களை அங்கே அறிந்துகொண்டான். குளத்திலிருந்து அழைத்துவரப்பட்ட பெண் ரதிதான் எனத் தெரிந்துகொண்டான். உடனே ரதியைக் காப்பாற்ற விரும்பினான். ஆனால் அவன் மாளிகையை அடைந்தபொழுது, சுற்றிலும் காவல் இருக்கக் கண்டான். அப்படியிருக்கையில் கிழவிக்குப் பாதி ராஜ்யம் அளிக்கப்பட்டது. விமல் மாறுவேடம் பூண்டு, கிழவியிடம் சென்று தான்



அவளை இளம் பெண்ணாக மாற்றி விடுவதாகச் சொன்னான். கிழவியும் ஆசையினால் நம்பிவிட்டாள். அவள் மாளிகையில் சிறிது நாள் தங்கியிருந்த விமல், ஒரு நாள் இரவு மாணிக்கத்தை ரகசியமாகக் கைப்பற்றிக்கொண்டு வீட்டை

விட்டுக் கிளம்பி, ரதியின் மாளிகையை நோக்கிச் சென்றான்.

காவல்காரர்கள் ஏமாந்திருந்த சமயம் பார்த்து உள்ளே சென்றான். ரதி அவன் யார் என்று புரிந்துகொண்டாள். பிறகு அவ்விருவரும் ரதன் இருக்கும் குளத்தை நோக்கிச் சென்றனர். மாணிக்கத்தின் உதவியால் உள்ளிறங்கிச் சென்றனர். அவர்களைக் காணுமல் தவித்துக்கொண் டிருந்த ரதனுக்கு நடந்ததை விளக்கினன் விமல். பிறகு மூவரும் படைவீரர்கள் வரப்போகும் இடத்தை நோக்கிச் சென்றனர். அதை அடையும் பொழுது இருட்டி விட்டதால்,

அங்குள்ள மரத்தில் ஏறிப் படுத்தார்கள்.

ரதனும் ரதியும் தூங்கும்போது விமல் காவல் காத்தான். அப்பொழுது மற்றொரு மரத்தில் இரு புருக்கள் அமர்ந்து மனிதக் குரலில் பேசிக்கொண்டிருந்தன. அவை பேசியதை விமல் கவனித்தான்.

மறுநாள் காலையில் ராஜகுமாரன் ஒரு யானைமீது ஏறுவான் என்றும் அப்பொழுது யானை அவனைக் கீழே தள்ளி நசுக்கிவிடும் என்றும் கூறியது ஆண் புரு. அதற்குப் பெண் புரு, "அதில் அவன் தப்பித்துவிட்டால் என்ன நேரிடும்?" என்று கேட்டது. ஆண் புரு, ரதனின் வருகைக்காக, உதயபானு ஒரு தங்கவாயில் கட்டியிருப்பான் என்றும், அது ரதன் தலையில் விழுந்து அவன் இறந்துவிடுவான் என்றும் கூறியது. பெண் புரு முன் கேட்ட கேள்வியையே கேட்டது.

ரதன் தூங்கும்பொழுது ஒரு பாம்பு கடித்து இறந்துவிடுவான் என்றது ஆண் புரு. மேலும், "மந்திரிகுமாரன் இதைக் கேட்டுக்கொண் டிருக்கிறன். இதை அவன் ரதனிடம் கூறிவிட்டால் கல்லாக மாறிவிடுவான். ரதனுக்குப் பிறக்கும் குழந்தையின் ரத்தத்தை அவன் கல்லில் தடவினுல் உயிர் பெறுவான்" என்று ஆண் புரு சொல்லிற்று. ரதனைக் காப்பாற்றுவதைத் தன் கடைமையாகக் கொண்டான் விமல்.

அடுத்த நாள் காலையில் அரசனும் அரசியும் தங்கள் பரிவாரங்களுடன் ரதனை வரவேற்பதற்காக வந்திருந்தனர். ரதியை ராணி தன் தேரில் ஏற்றிக்கொண்

சீட்டு: டேய் கோபு, நீ இரண்டு வருஷமா இருந்த ஹாஸ்டலை விட்டுத் திடீரென்று வேறு இடத்துக்கு ஏண்டா கிளம்பிவிட்டாய்?

கோபு: அந்த ஹாஸ்டலில் குளிக்கப் பாத்ரூமே கிடையாது என்பதை நேற்றுத்தான் கவனித்தேன். அதனால்தான் கிளம்பி விட்டேன்.

—ரு. நடராஜன், சென்னை-4.

டான். ரதன் ஒரு யானைமீது ஏறப்போனான். உடனே தயாராக அருகில் நின்றுகொண்டிருந்த விமல் அவனைத் தடுத்துக் குதிரையில் ஏறச் சொன்னான். ரதன் விமல் விருப்பப்படி நடந்தான். தகப்பனார் அமைத்திருக்கும் தங்கவாயிலில் நுழையச் சென்றான் தநயன். ஆனால் விமல் இங்கும் அவனைத் தடுத்தான்.

உதயபானு விமலின்மீது மிக்கக் கோபத்துடனிருந்தான். ரதன் சாப்பிடும்பொழுது கூடவே தானும் உட்கார்ந்தான் விமல். இரவில் ரதனும் ரதியும் படுத்துறங்கும் போது, கையில் கத்தியுடன் காவல் காத்தான். நடுநிசியில் பாம்பும் வந்தது. உடனே அதை வெட்டினான் விமல்.

கலவரம் கேட்டு விழித்த ரதி விமலைக் கண்டு கூச்சலிட்டாள். ரதன் விழித்துக்கொண்டு, விமலைப் பார்த்தான். தன் கத்தியால் அவனை வெட்டச் சென்றான். ஆனால் விமல் தடுத்து அவனுக்கு நடந்த விஷயங்களைக் கூறிக் கொண்டே வந்தான். அவன் உடம்பும் கல்லாகிக்கொண்டே வந்தது. விமல் முடித்தவுடன் முழு உடம்பும் கல்லாகிவிட்டது. ரதனும் ரதியும் மிக்க வருத்தமடைந்து, அந்த உடலை ஒரு பெட்டியில் போட்டுப் பத்திரப்படுத்தினர்.

ரதனும் ரதியும் மணம் செய்து கொண்டனர். சிறிது நாட்களில் ஒரு குழந்தையும் பிறந்தது. குழந்தை பிறக்கப் போவதை ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த ரதன், அந்தக் குழந்தையைத் தன் கத்தியால் வெட்டினான். ரத்தத்தை விமலின் உடலில் தடவினான். விமல் உயிர் பெற்றான். காளிதேவியின் கருணையால் குழந்தையும் உயிர் பெற்றது. பிறகு விமல் ரதனின் சகோதரியான கமலினியை மணம் புரிந்துகொண்டான்.

ரதன் அரசனாகவும் விமல் மந்திரியாகவும் இருந்து, நாட்டைச் சீரும் சிறப்புமாக ஆண்டார்கள்.

கண்ணன் கழக அங்கத்தினர்கள்

(T) 102. தங்கராஜா, G., சிலோன். 103. தாமஸ், E., சிலோன். 104. தங்கராஜா, K., கொழும்பு-2. 105. திருமலை ராவ், K., ஸ்ரீவில்லிப்புத்தூர். 306. திருநாவுக்கரசு, C., ஆலப்புழை. 107. திருமூர்த்தி, R., உடுமலைப்பேட்டை. 108. தில்லாலை, A. C., சிறுவயல். 109. திலகன், T.K.N., கொழும்பு-3. 110. தவமணிதேவி, S., நீர்வேலி, சிலோன்.

(V) 149. வெங்கடேசன், A. K., சேலம். 150. விஜயா, M., மதுரை. 151. விஜயரங்கம், P. R., சென்னை-1. 152. வடிவேலு, S., வாணுபுரம். 153. வாசுதேவன், S., திண்டிவனம். 155. வைஜயந்திபாய், காஞ்சிபுரம். 156. வதனு, P., பட்டுக்கோட்டை. 157. வீர.வள்ளியப்பன், சிலோன். 158. விசுவநாதன், சாந்தா, S., நாகபுரி. 159. விசுவநாதன், பத்மநாபன், சங்கரநாராயணன், V.R., பம்பாய்-19. 160. வேதாந்தம், கமலநாதன், முத்துசாமி, A., ஈச்சங்குடி. 161. வெங்குசாமி, M.R., கரூர். 162. விஜயன், V. G., கொழும்பு. 163. விமலாதேவி, சிவானந்தராஜூ, T., சிலோன். 164. வெங்கடேசன், T., புதுடில்லி. 165. வெங்கடேசன், E. R. N., கரூர். 166. வேங்கடராமன், R., கும்பகோணம். 167. வாசன், K. S. S., (விலாசம் எழுதவில்லை). 168. வேங்கடராமன், A. R., கரூர். 169. விஜயராஜ், T., சிலோன். 170. வலியநாயகம், S., திருநெல்வேலி டவுன். 171. வேதரத்தினம், K., எத்தாப்பூ. 172. வைத்தீஸ்வரன், சுப்பிரமணியன், B. V., சங்கரன்கோயில். 173. வேலாயுதம், வடிவேலு, M. D., மத்தராப்பள்ளி. 174. வசந்தா, V., பெங்களூர். 175. வசந்தா, K. V.L., கரக்பூர். 176. விசுவநாதன், S., சேங்காலிபுரம். 177. வசந்தா, பத்மா, S.R., பாலக்காடு. 178. வைத்தியநாதன், H., டில்லி. 179. வெங்கடாசலம், M., சிலோன். 180. வத்சலா, ராமசுப்பிரமணியன், S., திருவண்ணமலை. 181. வெங்கடராமன், V., கும்பகோணம். 182. வரதராஜன், S., திருவனந்தபுரம். 183.

இங்கே கத்தரிக்கவும்

கண்ணன் கழகம்

அங்கத்தினர் பதிவு கூபன்

(கட்டணம் இல்லை)

பெயர் ....

விலாசம் ....

....

பிறந்த தேதி..........................

(தேதி, மாதம், வருஷம்)

மார்ச்சு. '53 கூபன் செ:

வேலாயுதம் பிள்ளை, M., காரை நகர். 184. வேங்கடசுப்பிரமணியன், துறையூர். 185. வீரபாகு, S., பணகுடி. 186. விஜயலக்ஷ்மி, N.S., சிறுகமணி. 187. விசுவநாதன், S., மோகனூர். 189. வெங்கடசுப்பிரமணியன், R., கீழ கபிஸ்தலம். 190. வெள்ளையன், P.R., கொழும்பு. 192. விசுவநாதன், R., சேலம். 193. விசுவநாதன், A., தென்னூர். 194. வேலுசாமி, S. K., உடுமலைப் பேட்டை. 195. வேலாயுதசாமி, M.V., ராஜபாளையம். 196. வேங்கடரமணி, P.V., ராஜபாளையம். 197. வேணு, வேலாயுதம், புதுச்சேரி. 198. வேலாயுதம், M. D., விஷமங்கலம். 199. வள்ளியம்மாள், D., மேட்டுப்பாளையம் 200. வசந்தி, V., (விலாசம் எழுதவில்லை). 201. விஜயலக்ஷ்மி, சிறுவந்தாடு. 202. வள்ளிநாயகம், N., கோயம்புத்தூர்.

★★★★★★★★★★★★★★★★

கண்ணன்

கழகம்

★

புதிதாகச் சேருபவர்கள் அந்த மாதத்துக் கூபனும் அதற்கு முந்திய இரண்டு மாதக் கூபன்களும் தான் அனுப்ப வேண்டும். பழைய கூபன் செல்லாது.

★★★★★★★★★★★★★★★★

203. வேங்கடராமன், ராதா, G., நெல்லிக்குப்பம். 204. வெங்கடராமன், P.S., புதுடில்லி. 205. வெங்கடாசலம், R., தேவகோட்டை. 206. வள்ளியப்பன், S., கண்டி, சிலோன். 207. வரதராஜன், S., திருவனந்தபுரம். 208. விசுவநாதன், A., ஆலப்புழை. 209. வைகுண்டபதி, மீனாக்ஷிநாதன், S. K., பாபநாசம் மில்ஸ் (P.O.). 210. வெங்கடேசுவரன், S., நாட்டரசன் கோட்டை. 212. விஜயராகவன், V., கோயம்புத்தூர். 212. வேங்கடரத்தினம், வல்லிக்கண்ணன், S., விழுப்புரம். 214. வேங்கடராமன், K.S., ஆம்பூர். 215. விவேகானந்தன், M., பாளையங்கோட்டை. 216. வித்யாரத்தினம், M. R., கோயம்புத்தூர். 217. வெங்கடாசலம், பாகசாலை. 218. வேதாம்பரம், பாலசுப்பிரமணியன், அறந்தாங்கி. 219. வெங்கடேசன், A., உஜ்ஜயின். 220. வேங்கடராமன், R., ஆலப்புழை. 222. விஜயரங்கன், செல்வராஜ், ராமநாதன், நடராஜன், ராஜசுந்தரம், S., விழுப்புரம். 223. வையாபுரி, M., காஞ்சர்குப்பம். 224. வெங்கடரமண ராவ், K., தஞ்சாவூர். 225. வேங்கடராமன், R., தொட்டப்பாளையம். 226. வேதாசலம், N.S., வாலாஜாப்பேட்டை. 227. வள்ளிசாமி, C., வடுகப்பட்டி. 228. விவேகாநந்தன், M., ராஜபாளையம். 229. விமலா, R., மேட்டூர்அணை. 230. வேலாயுதம், A., காரைக்கால். 231. வேலுசாமி, S.K., உடுமலைப்பேட்டை.

(மீதி அடுத்த இதழில்)

செல்லாத ரூபாய்

ரு. துளசிதாஸ்

செல்லாத ஓரணுக் காசு ஒன்று என் கைக்கு எப்படியோ வந்து சேர்ந்தது. நான் ஏமாந்துபோனதை அறிந்த என் நண்பர்கள், "டேய்! ஏமாந்த சோணகிரி!" என்று பட்டப் பெயர் வைத்து என்னைக் கேலி செய்தார்கள். எனக்கு ரோஷம் பொத்துக்கொண்டு வந்தது. "பாருங்கடா, இன்றைக்கு ராத்திரிக்குள் இந்தச் செல்லாக் காசைச் செல்லவைத்து விடுகிறேன்!" என்று வீறாப்புடன் அவர்களிடம் சவால் விடுத்தேன்.

"போடா... போடா...! நீதான் யாரிடமோ ஏமாந்து அந்தக் காசை வாங்கிவந்திருக்கிறாய்! உன்னிடம் எந்த மடையன்டா ஏமாறப்போகிறான்?" என்று மேலும் என்னைக்கேலி செய்தார்கள். உடனே நான் சாணக்கியனாக மாறினேன். "இந்தக் காசை வேறு யாரிடமாவது செல்ல வைக்காவிட்டால், என் பெயரை மாற்றிக் கொள்ளுங்களடா.." என்று சபதம் செய்துவிட்டு அவர்களை விட்டுப் பிரிந்து சென்றேன்.

அன்று இரவு வந்தது. ஆமாம்! என் சபதத்தை நிறைவேற்றி முடிக்கவேண்டிய காலம் வந்தது.

இரவு மணி எட்டாயிற்று. பிறரை ஏமாற்ற இரவுதானே நல்ல சமயம்! ஆகவே செல்லாத ஓரணுவை எடுத்துக்கொண்டு கடைத்தெருவுக்குப் போனேன். எந்தக் கடையில் யாரை எந்த முறையில் ஏமாற்றலாம் என்று என் மூளை தீவிரமாக வேலை செய்தது.

முதலில் ஒரு பத்திரிகைக் கடைக்குச் சென்றேன். ஓரணுப் பத்திரிகையொன்றை வாங்கிக் கொண்டு காசைக் கடைக்காரனிடம் கொடுத்தேன். அவன் காசை இருமுறை கூர்ந்து பார்த்துவிட்டு, "என், தம்பி! ராத்திரி வேளையிலே ஏமாத்திட்டுப் போகலாம்னு வந்திருக்கியா? காசு செல்லாது தம்பி, பத்திரிகையைக் கீழே

சோமு: டேய் கிட்டு, ராமுவின் அப்பா எப்படிப் பணக்காரர் ஆனார் தெரியுமா?

கிட்டு: தெரியுமே! செருப்புக் கடையை விட்டுவிட்டு, குல்லாய்க் கடையை வைத்தார். அதனாலே தான்.

சோமு: அதுதான் இல்லே. அவர் முன்பு எல்லாருடைய காலையும் பிடித்துப் பணக்காரர் ஆனார். பின் அந்தப் பணத்தைப் பெருக்க எல்லோருக்குமே குல்லாய் போட்டார்.

—கி. பாலன், B-114.

வச்சுட்டு வந்த வழியைப் பார்த்துப் போ!" என்று காரசாரமாகப் பாதி சொல்லிக்கொண் டிருக்கும்போதே காசை வாங்கிக்கொண்டு நடையைக் கட்டினேன், திரும்பிக் கூடப் பார்க்காமல். இப்படியே நான் தொடர்ந்து சென்ற ஐந்தாறு கடைகளிலும் தோல்வி தான் எனக்குக் கிடைத்தது. திடீரென்று எனக்குப் புது யோசனை ஒன்று தோன்றியது.

'காந்திஜி ஸ்டோர்ஸ்' எங்கள் ஊரிலேயே பிரபலமான கடை. அங்கே என்ன சாமான் வேண்டுமானாலும் வாங்கலாம். எப்போதும் வேலை சுறுசுறுப்பாக நடந்துகொண்டிருக்கும். அவர்களுடைய ஓய்வில்லாத வியாபார நெருக்கடியில் என் செல்லாக் காசைக் கவனிக்க அவர்களுக்கு எங்கே நேரமிருக்கப் போகிறது! இந்த அசட்டுத் தைரியத்துடன் அந்தக் கடைக்குள் புகுந்தேன். "சார், ஓரணாவுக்குச் சாக்லெட் கொடுங்க, சார்!" என்று கடைக்காரரிடம் காசை நீட்டினேன். மறு நிமிடம் அந்தக் காசு அவருடைய பணப் பெட்டிக்குள் புகுந்தது; என் கைக்கு சாக்லெட் வந்து சேர்ந்தது. காசைச் செல்ல வைத்துவிட்டோம் என்ற பூரிப்பில் வீட்டை நோக்கி நடந்தேன். என் சபதம் நிறைவேறிவிட்டதை அடுத்தவீட்டுப் பாலுவிடம் நிரூபிப்பதற்காக அவனிடம் ஒரு சாக்லெட் கொடுத்துவிட்டு நான் ஒரு சாக்லெட் எடுத்துக்கொண்டேன். என் திறமையைப் பாலு மிகவும் புகழ்ந்தான். அந்த விதத்தில் என் மானத்தை நான் காப்பாற்றிக்கொண்டேன்.

மறுநாள் காலை ஒன்பதுமணிக்கு பள்ளிக்கூடம் போவதற்காகப் பாலுவைக் கூப்பிடச் சென்றேன். சிறிது நேரத்திற்கு முன்புதான் பாலு புறப்பட்டுப் போய்விட்டதாக அவனுடைய தங்கை சாந்தா தெரிவிக்கவே தனியே பள்ளிக்கூடத்துக்குப் புறப்பட்டேன். எப்பொழுதும் நான் பஸ்ஸில்தான் போவது வழக்கம். ஆகவே என்றும்போல அன்றும் பஸ்ஸில் ஏறிக்கொண்டேன். கண்டக்டரிடம் முழு காலணா நாணயத்தைக்

கொடுத்துப் பள்ளிக்கூடம் செல்வதற்குண்டான ஓரணு டிக்கட் வாங்கிக்கொண்டேன். மீதிச் சில்லறையைக் கண்டக்டர் என்னிடம் கொடுத்தான். பள்ளிக்கூடம் 'பஸ் ஸ்டாப்' வந்ததும் பஸ்ஸிலிருந்து பிரயாணிகள் சிலர் இறங்க ஆரம்பித்தார்கள். நானும் அதே முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். அப்போது பஸ் டிரைவரும் கண்டக்டரும் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்—

"ஏனப்பா கண்டக்டர்! ஐந்து ரூபாய்க்குச் சில்லறை மாற்ற அவ்வளவு நேரமா பிடித்தது?"

"உனக்கு என்னப்பா தெரியும்? கடையில் வேலை ரொம்ப மும்முரமாக இருந்தது. அதனால்தான் சில்லறை மாற்ற ஐந்து நிமிஷமாச்சு...."

"எந்தக் கடையிலே சில்லறை வாங்கினே?" - இப்படி டிரைவர் கண்டக்டரைக் கேட்டுக்கொண்டிருக்கும்போதுதான் நான் பஸ்ஸை விட்டுக் கீழே இறங்கினேன். நான் தரையில் காலை வைப்பதும், கண்டக்டர், "நம்ம காந்திஜி ஸ்டோர்விலேதான் சில்லறை மாற்றினேன்" என்று பதில் சொல்வதும் ஒன்ருக இருந்தன. எனக்கு இனம் தெரியாத பரபரப்பு ஏற்பட்டது. அவசர அவசரமாகக் கால்சட்டைப் பைக்குள் கையை விட்டு, கண்டக்டர் கொடுத்த சில்லறையை வெளியே எடுத்துப் பாரத்தேன். மறுகணம் தலை சுழல ஆரம்பித்தது. தலையை நிமிர்த்தினேன்; பஸ் ஓடிக்கொண்டிருந்தது.

நான் முந்தின இரவு, 'காந்திஜி ஸ்டோர்ஸ்'வில் கொடுத்திருந்த அதே ஈயக்காசு ஓரணு என் பரிதாப முகத்தைப் பார்த்துப் பரிகசித்துக்கொண் டிருந்தது.



மாயப் புத்தகம்

என். எஸ். ஸ்ரீ

தூங்கிக்கொண்டிருந்த குட்டிக் கண்ணன் திடீரென்று எழுந்து உட்கார்ந்து படுக்கையைத் தடவ ஆரம்பித்தான்.

"என்னடா அது?" என்ருள் அம்மா.

"படம், அம்மா. படம்!" என்ருன்.

"படமா? சொப்பனம், கிப்பனம் கண்டாயா என்ன? பேசாமல் படுத்துத் தூங்கு" என்ருள்.

இதற்குள் குட்டிக் கண்ணனின் தூக்கம் கலைந்து, கண்களைத் திறந்து பார்த்தான். அம்மா சொன்னமாதிரி சொப்பனம்தான். அவனுக்கு ஒரே அவமானமாகப் போய்விட்டது.

உடனே அவன் தன் தாயாரை நோக்கி, "சொப்பனம் எப்படி வருகிறது?" என்று கேட்டான்.

"சொப்பனமா? அது ஒரு பெரிய கதை. படுத்துக்கொண்டு தூங்கு. காலையில் சொல்கிறேன்" என்ருள்.

"இப்பொழுதே சொல்லு, அம்மா. எனக்கு இப்பொழுது தூக்கம் வரவில்லை" என்ருன்.

"அப்படியானல் சொல்கிறேன், கேள்" என்று தாயார் சொல்ல ஆரம்பித்தாள்.

* * *

மாசி மாதத்து நிலா ஜிலுஜிலுவென்று பிரகாசித்துக்கொண்டிருந்தது. வனதேவதைகளுக்குப் பெரும் கொண்டாட்டம். ஒன்ருேடு ஒன்று கை கோத்து அழகாக ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தன. அத்துடன் அன்று அவைகளுடைய ஆட்டத்தைப் பார்க்க அரசனும் அரசியும் வருவதாகச் சொல்லியிருந்தார்கள். ஆகவே ஒவ்வொன்றும் நன்ருக அலங்காரம் செய்துகொண்டு வந்திருந்தது. ஒரே கும்மாளம்! மகிழ்ச்சி வெள்ளம்! மெய்ம்மறந்து ஆடின.

ஆனல் ஒரே ஒரு வனதேவதை மட்டும் இதில் கலந்துகொள்ளாமல், சிறிது தூரத்தில் தனிமையில் உட்கார்ந்துகொண்டு இவைகள் ஆடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தது.

அரசனும் அரசியும் வந்தார்கள். உடனே எல்லாம் ஆடுவதை நிறுத்திவிட்டு, அவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்காக வரிசையாக அணிவகுத்து நின்றன. தனித்து உட்கார்ந்திருந்த வனதேவதையும் இந்த அணிவகுப்பில் கலந்துகொண்டது.

அணிவகுப்பு முடிந்ததும் மீண்டும் ஆட்டமும் பாட்டும் ஆரம்பமாயின. தனித்து உட்கார்ந்திருந்த வனதேவதை பழையபடி தன்னுடைய இடத்துக்குப் போய் உட்கார்ந்துவிட்டது.

இதைக் கண்ட அரசி, அருகிலிருந்த ஒரு வனதேவதையை நோக்கி, "ஏன் அது ஆட்டத்தில் கலந்து கொள்ளவில்லை?" என்று கேட்டாள்.

"அம்மணி! அது ஒரு துக்ககரமான சமாசாரம்" என்று சொல்லி

விட்டு, "ஒரு சமயம் இதன் தாயார் எங்களை விட்டு விட்டுக் கடற்கரைக்குச் சென்றிருந்தாள். அங்கே ஒருவனை மணந்துகொண்டு விட்டாள். ஆனால் இந்தக் குழந்தை பிறந்ததும் அவன் இறந்து விட்டான். இதைக் காப்பாற்ற அவளுக்கு வகையில்லை. ஆகவே அவள் மறுபடியும் இங்கே இதைக் கொண்டு விட்டுவிட்டுச் சொல்லாமல் எங்கோ போய்விட்டாள். போனவள் போனவள்தான். பிறகு திரும்பவே இல்லை. அது முதல் இது போக்கிடமின்றி எங்களுடனேயே இருந்து வருகிறது. ஆனால் அதன் தாயின்மீது எங்களுக்குள்ள கோபத்தில் இதை நாங்கள் ஆட்டத்தில் சேர்த்துக் கொள்வ

தில்லை'' என்று ரகசியமாய் அரசியின் காதில் சொல்லிவிட்டு அந்த வனதேவதை போய்விட்டது.

''பாவம்!'' என்று சொல்லிக் கொண்டே அரசி தனிமையாக உட்கார்ந்திருந்த அந்த வன தேவதையிடம் சென்றாள்.

அது மெய்ம்மறந்து ஆனந்தமாக இவைகள் ஆடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தது. அதை அறியாமலே அதன் கால் விரல்கள் தாளம் போட்டுக்கொண் டிருந்தன.

இதைக் கண்ட அரசி சிரித்துக் கொண்டே, ''ஏன் நீ தனிமையில் உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று ஒன்றும் தெரியாதவள்போல் கேட்டாள்.

''அவர்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லையே!'' என்றது.

''உனக்குச் சேர்ந்து விளையாட விருப்பந்தானா?'' என்று கேட்டாள் அரசி.

''விருப்பந்தான். இருந்தாலும் பரவாயில்லை. அதைப் பார்த்துக் கொண்டிருப்பதில்கூட ஓர் ஆனந்தம் இருக்கிறது'' என்றது.

''அப்படியானால் இதைவிட சந்தோஷத்தை அளிக்கக்கூடிய ஒரு பொருளை உனக்குக் கொடுக்கிறேன். இந்தா, பிடி'' என்று சொல்லி ஒரு புத்தகத்தை அதனிடம் கொடுத்துவிட்டு, ''இதைப் பகலில் பார்த்தால் இதில் ஒன்றுமே தெரியாது. இரவில் பார்த்தால் நிறைய விஷயங்கள் இருக்கும். அவர்கள் விளையாடும் பொழுது இதைப் பார்த்து நீ பொழுது போக்கலாம்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

அரசனும் அரசியும் போன பிறகு அது புத்தகத்தைத் திறந்து பார்த்தது.

என்ன அதிசயம்! உண்மையிலேயே அது ஒரு மாயப் புத்தகம் தான். அதில் கணக்கின்றி நிறையப் படங்கள். அதுவும் கண்ணையும் மனத்தையும் கவரும் படங்கள். குழந்தைகள், மரம், செடி, கொடி, ஆறுகள், மலைகள், மிருகங்கள், பறவைகள், கடல்கள் எல்லாம் அப்படியே உண்மையில், உயிருடன் எதிரே இருக்கிறமாதிரியே இருந்தன. மலர்களிலிருந்து வாசனை வீசியது. கடல், ஆறு ஆகியவற்றில் ஜலம் இருக்கிற மாதிரியே தோன்றியது. குழந்தைகள் உண்மையிலேயே ஓடி ஆடுகிறமாதிரி இருந்தது.

இதைப்பார்த்த அந்த வனதேவதைக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. இதர தேவதைகளும் இதைப் பார்த்துச் சந்தோஷப்பட வேண்டும் என்பது அதன் ஆசை. அத்துடன் பகலில் தெரியாது என்று அரசி சொல்லியிருக்கிறாள். ஆகவே அவைகளை அழைத்தது. ஆனால் அவைகளுக்கு ஆட்டத்தில் இருந்த குஷியில் வர மறுத்து விட்டன.

இதற்குள் உதயம் ஆகிவிட்டது. எல்லாம் சென்றுவிட்டன.

மறு நாள் இரவு வந்தது. பழைய படி எல்லாம் வந்து சேர்ந்தன. ஆட ஆரம்பித்து விட்டன.

வழக்கப்படி அந்த வனதேவதை தனியாக உட்கார்ந்திருந்தது. புத்தகத்தில் உள்ள படங்களைப் பார்த்துக்கொண் டிருந்தது. ஆனால் அதன் மனத்தில் சந்தோஷம் இல்லை.

இதை அறிந்த அரசி ரகசியமாக அதனிடம் வந்து, ''ஏன், என்னவோபோல இருக்கிறாய்? புத்தகம் எப்படி இருக்கிறது?

உனக்குப் பிடித்திருக்கிறதோ?" என்று கேட்டாள்.

"உயர்ந்த புத்தகந் தான். அதுவும் கிடைக்கக்கூடாத புத்தகம். இருந்தாலும் என்னுடன் சந்தோஷத்தை அவர்கள் பகிர்ந்து கொள்ளாதது எனக்கு மிகுந்த வருத்தத்தை உண்டு பண்ணுகிறது" என்றது.

அரசி,பாவம், அதன் மீது இரக்கம் கொண்டாள். "அவைகள் ஆடும்போது இதைச் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆனால் இது தனக்குக் கிடைத்துள்ள ஒரு சந்தோஷத்தை அவைகளும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறது" என்று சந்தோஷப்பட்டு, அதன் கையில் ஒரு கோலைக் கொடுத்தாள். "இது ஒரு மந்திரக் கோல். நீ இதனால், தூங்கிக்கொண்டிருக்கும் குழந்தைகளைத் தொட்டால், அவைகள் விழித்துக்கொள்ளும். அப்பொழுது இந்தப் புத்தகத்திலுள்ள விதம் விதமான படங்களை அவைகளுக்குக் காட்டினால் அதைப் பார்த்து அவைகள் மிகவும் சந்தோஷப்படும். ஆனால் கண்கள் மூடியபடிதான் இருக்கும். பிறருக்கு அவைகள் விழித்துக்கொண்டிருப்பதாகவே தெரியாது" என்று சொல்லிவிட்டுப் பல இடங்களுக்கும் பறந்து செல்லக்கூடிய உறுதியான இரண்டு இறக்கைகளைக் கொடுத்துவிட்டுச் சென்றாள் அரசி.

அது முதல் தூங்கும் குழந்தைகளிடம் இந்த வனதேவதை வந்து தன் புத்தகத்திலுள்ள படங்களை அவைகளுக்குக் காட்டி, சந்தோஷப் படுத்தித் தானும் அதைப் பகிர்ந்துகொண்டு அநுபவிக்கிறது. இதுதான் சொப்பனத்தின் கதை.

குட்டிக் கண்ணனின் தாயார் இவ்வாறு கதையைச் சொல்லி முடித்தாள்.

அது வரைக்கும், சுவாரசியமாக இடையில் பேசாமல் கதை முழுவதையும் கேட்ட குட்டிக் கண்ணன், "அதுதான் நல்ல வனதேவதை. எல்லாரும் அதைப் போல் நடந்து கொண்டால் உலகில் கஷ்டமே இராது அல்லவா? நானும் அது மாதிரியே நடந்து கொள்வேன்" என்று சொல்லிவிட்டுப் படுக்கையில் படுத்துத் தூங்கினான்.



கொடி விளையாட்டு

'ரமணீயன்'

இந்த விளையாட்டில் பலர் கலந்துகொள்ளலாம். முதலில் ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். மீதி எல்லாப் பையன்களும் வரிசையாக நின்று இரு கட்சிகளாகப் பிரியவேண்டும். இரு கட்சிகளும் இரு நாட்டைச் சேர்ந்தவர்கள். எனவே ஒரு நீண்ட கோட்டினால் பிரித்துக்கொள்ள வேண்டும். இரு கட்சியிலும் உள்ள பையன்கள் கோட்டுக்குள் பத்துகஜ தூரத்தில் கைக்குட்டையையோ மேல்துண்டையோ, சட்டையையோ வைக்கவேண்டும். இவைகள் தான் அவர்கள் நாட்டுக் கொடிகள்.

தலைவன் விசில் ஊதியவுடன் ஒரு கட்சி அந்தக் கோட்டின் மறு பக்கத்துக்கு ஓடி, விரோதியின் கொடியைக் கைப்பற்ற முயல்வார்கள். கொடியை எடுத்துக்கொண்டு கோட்டுக்கு வெளியே போய்விட்டால் அவர்கள் ஜயித்தவர்கள். கொடியைக் கைப்பற்றும்போது விரோதியிடம் மாட்டிக்கொண்டவர்கள் கைதிகள். மறுபடியும் முன்போல் இரு கட்சியாகப் பிரிந்துதான் ஆடவேண்டும். கைதிகள் ஆட்டம் முடியும் வரையில் கலந்துகொள்ள முடியாது. எந்தக் கட்சி அதிகக் கொடிகளை இழக்காமல் அதிகக் கைதிகளை வைத்திருக்கிறதோ அந்தக் கட்சிதான் ஜயித்த கட்சி. ஒரு பையன் ஒரு கொடியைத் தான் எடுத்து வரவேண்டும்.

புதன்

பெ. நா. அப்புஸ்வாமி,
ஜே. பி. மாணிக்கம்.

புதன் (மர்க்குரி)

ஒரு நாள் மாலையில் கண்ணனும் ராதாவும் தங்களுடைய பாட்டியோடு புரொபஸர் விஞ்ஞானத்தின் வீட்டுக்கு வந்தார்கள். விஞ்ஞானம் அவர்களை முக மலர்ச்சியோடு வரவேற்றார். "இன்றைக்குப் பாட்டியையும் அழைத்து வந்திருக்கிறீர்களே, என்ன விசேஷம்?" என்றார்.

அதற்குப் பாட்டி, "அப்பா, விஞ்ஞானம்! நீ நவக்கிரகங்களைப் பற்றி ஏதோ சொல்லப் போகிறாய் என்று குழந்தைகள் சொன்னார்கள். நான் தினந்தோறும் நவக்கிரகங் களைச் சுற்றுகிறேன். அவர்களைப் பற்றி நீ ஏதாவது சொன்னால் கேட்கலாம் என்று வந்தேன்" என்றாள்.

"நான் சொல்லப்போகும் நவக் கிரகங்கள் வேறு, நீங்கள் வணங் கும் நவக்கிரகங்கள் வேறு. கண்ணா, நவக்கிரகங்களை உனக்குத் தெரி யும், அல்லவா?" என்றார் விஞ் ஞானம்.

"தெரியுமே. புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரனஸ், நெப்டியூன், புளூட்டோ. சரிதானே?" என்றான் கண்ணன்.

பாட்டி விழித்தாள். "இது புதிதாயிருக்கிறது. ஆனால், நீ யாரைப் பற்றிச் சொன்னாலும் நான் கேட்கிறேன்" என்றாள்.

"இன்று புதன்கிழமை அல்லவா? புதனைப் பற்றிச் சொல லட்டுமா?" என்றார் விஞ்ஞானம்.

"சரி, சொல்லுங்கள்."

"நான் சொல்லப்போகும் நவக் கிரகங்கள் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள் இவைகளைப்போல் வான வெளியில் திரிபவை. இந்த நவக்கிரகங்கள் நமது சூரியனைச் சுற்றி வருகின்றன."

"பாட்டி கோவிலில் உள்ள நவக்கிரகங்களைச் சுற்றுவது போல்" என்றாள் ராதா.

"அவைகளில் புதன் என்பது சூரியனுக்கு மிகவும் கிட்ட உள்ளது. அது பூமியைவிட அளவில் மிகச் சிறியது. சந்திரனைப் போல் மூன்றரை மடங்கு உள்ளது. அது எடையிலும் குறைவானது. நமது பூமியை ஒரு தராசுத் தட்டில் வைத்தால், மற்றொரு

யோதயத்துக்குச்சற்று முன்னே கிழக்கே தோன்றும். அங்கும் இதே நாடகம்தான். சில நாள் வரையில் வரவரப் பிரகாச மாகும்; பெரியதாகும். பின்பு வரவர ஒளி மங்கிச் சிறிதாகும். பின்பு மறைந்து போகும். அதற்குச் சில காலத்துக்குப் பிறகு மறுபடியும் மேற்கே தோன்றத் தொடங்கும்.''

''அந்த இரண்டும் ஒன்றுதானு? அல்லது வெவ்வேரு?'' என்ருள் பாட்டி.

''இரண்டும் ஒன்றுதான். பழங் காலத்தில் அவை இரண்டு என்று சிலர் நினைத்தார்கள். கிரேக்கர் கள் காலையில் தோன்றிய புதனை ஜோதி என்னும் தெய்வம் என்று வணங்கினுர்கள்; மாலையில் தோன் றிய புதனை மெர்க்குரி என்னும் தெய்வம் என்ருர்கள். பாட்டி புத பகவான் என்று சொல்வதில்லையா, அதேபோல.

''புதன் சூரியனைச் சுற்றி ஓடு கிறது. ஆனுல், அது எப்பொழுதும் ஒரே வேகத்தோடு ஓடுவதில்லை. அது சூரியனிடமிருந்து எப்பொழு தும் ஒரே தூரத்திலும் இருப்ப தில்லை. ஏனென்ருல், அது ஓடும் பாதை வட்டமானது அன்று. அது கோழி முட்டை வடிவமானது. அது சூரியனை நெருங்கி ஓடும் போது சுமார் இரண்டே முக்கால் கோடி மைல் தூரம் இருக்கும். அப்போது அது நொடிக்கு முப்பத் தாறு மைல் வீதம் ஓடுகிறது. அது சூரியனிடமிருந்து ஒதுங்கி ஓடும் போது சுமார் நாலே கால் கோடி மைல் தூரம் இருக்கும். அப்பொ

தட்டில் இருபத்து நாலு புதன் களை வைத்தால்தான் எடை சரியாகும்.''

''அதைப் பார்க்க முடியுமா, ஸார்?'' என்ருள் ராதா.

''முடியும். ஆனுல் சற்றே கஷ்டம்தான். அது அளவில் சிறியது. அதற்குச் சுயமான ஒளி கிடையாது. சின்னக் குழந்தை தாயாரைவிட்டு அதிக தூரம் போகாமல் இருப்பதுபோல, அது சூரியனைவிட்டு அதிக தூரம் எட்டிப் போவதில்லை. ஆகையால், எந்தக் காலத்திலும் அதை வெறும் கண்ணுல் ஒரு மணி நேரத்துக்கு மேல் பார்க்கவே முடியாது.''

''இப்பொழுது தெரியுமா, ஸார்?'' என்ருன் கண்ணன்.

''இது மார்ச்சு மாதம், அல்லவா? இந்த மாதத்தில் சூரியன் அஸ்தமித்துச் சிறிது நேரத்துக்கெல்லாம் அது மேற்கே, ஒரு சிறிய நக்ஷத்திரத்தைப்போல், மஞ்சள் கலந்த சிவப்பு நிறத் தோடு தோன்றும். நாளுக்கு நாள் சற்றே பிரகாசமாகிக்கொண்டே வரும். பின்பு வரவர மங்கும். அதற்குச் சில நாளைக்குப் பிறகு அதைக் காணமுடியாது. அதற்கும் கொஞ்ச நாள் கழித்து, அது சூரி

ழுது அதன் வேகம் குறைவு; நொடிக்கு இருபத்து நாலு மைல் வேகம்.

"புதன் நம்மிடமிருந்து வெகு தூரத்தில் இருக்கிறது. அதனால் இங்கிருந்து பார்த்தால் அது ஓடுவதாகத் தெரியாது. ஆனால் அது வான வெளியிலே நாளுக்கு நாள் இடம் மாறுவது தெரியும்.

"அதைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியின் வழியாகப் பார்த்தால், அதற்குக் கலைகள் இருப்பது தெரியும். இந்தப் படத்தைப் பாருங்கள். பூமி ஓடும் பாதையும், புதன் ஓடும் பாதையும், நடுவில் சூரியனும், பூமியிலிருந்து பார்ப்பவர்களுக்குப் புதன் எப்படி எல்லாம் தோன்றுகிறது என்றும் இதில் காட்டியிருக்கிறது. சந்திரனுக்கும் இதற்கும் வேறு ஒற்றுமைகளும் உண்டு. இரண்டுக்கும் சுய ஒளி கிடையாது. இரண்டும் சூரியனுடைய வெளிச்சத்தைப் பிரதிபலித்தே பிரகாசமாகத் தோன்றுகின்றன. இதிலும் சில களங்கங்கள் மிகவும் மங்கலாக இருக்கின்றன. சிலர் அவைகள் புள்ளிகளைப்போல் இருக்கின்றன என்கிறார்கள். சிலர் அவைகள் கோடுகளைப்போல் இருக்கின்றன என்கிறார்கள். சந்திரனில் இருப்பதுபோல் புதனிலும் மலைகள் இருக்கலாம் என்கிறார்கள்."

"அதனால்தான் புதன் சந்திரனுடைய குமாரன் என்கிறார்கள் போலிருக்கிறது" என்றாள் பாட்டி.

"இந்தப் படத்தைப் பாருங்கள். புதனுடைய அளவு ஒரு சமயத்தில் சிறிதாகவும், வேறு சமயத்தில் பெரிதாகவும் தெரிகிறது, அல்லவா?

"புதன் நம்மிடமிருந்து அதிக தூரத்தில் இருக்கும் போது சிறிதாகவும், நமக்கு அருகில் இருக்கும்போது பெரிதாகவும் தோன்றுகிறது. அது நமக்கு அருகில் வரும்போது ஐந்தரைக் கோடி மைல் தூரத்தில் இருக்கிறது. அது எட்டிப்போகும் போது சுமார் பதின்மூன்று கோடிமைலுக்கு அப்பால் போய் விடுகிறது.

"அது சூரியனைச் சுற்றி ஓட 88 நாள் ஆகிறது. ஓடும்போது அதன் ஒரு பக்கம் எப்பொழுதும் சூரியனைப் பார்த்தே இருக்கிறது. ஆகையால், அது தன்னைத் தானே சுற்றவும் அதற்கு அதே காலம்தான் ஆகிறது. ஆகவே, அதில் ஒரு நாள் என்பது பூமியில் எண்பத்தெட்டு நாள்."

"இது என்ன வேடிக்கை!" என்றாள் பாட்டி. "அங்கே ஏகாதசிப் பட்டினி கிடந்தால், அப்புறம் அவ்வளவுதான்!" என்றான் கண்ணன்.



கலைகள்

"ஆனால் அங்கே ஒரு வருஷம் என்பது நம்முடைய வருஷத்தைப் போல் எண்பத்தெட்டு மடங்கா?" என்றாள் ராதா.

"இல்லை. நமக்கு வருஷம் என்பது 365 நாள். சூரியனைப் பூமி ஒரு முறை சுற்றிவர ஆகும் காலத்தைத்தானே நாம் ஒரு வருஷம் என்கிறோம். அதுபோல், புதன் சூரியனைச் சுற்றி வருவதற்கு நம்முடைய கணக்கில் 88 நாள் ஆகிறது. ஆகையால், அங்கே ஒரு வருஷம் என்பது 88 நாள்."

"ஸார், ஞானரதத்தில் புதனுக்குப் போய்ப் பார்க்கலாமா?" என்றான் கண்ணன்.

"என்ன? எங்கே? எப்படி?" என்றாள் பாட்டி.

"நாங்கள் ஞானரதத்தில் ஏறிப் போய், மனக் கண்ணால் பார்ப்போம். நீயும் வா, பாட்டி" என்று அழைத்தாள் ராதா.

"சரி, போவோம். இதோ புதனுக்கு அருகே வந்துவிட்டோம். இதோ மிக மிக லேசான வாயுமண்டலம் இருக்கிறது. இதோ தூசிகள் இங்கொன்று அங்கொன்றாகப் பறக்கின்றன. இந்தப் பக்கத்தில் வருஷம் முழுவதும் வெயில் காய்கிறது. இங்கிருந்து சூரியனைப் பார்த்தால் பூமியிலிருந்து பார்ப்பதை விட மூன்று பங்கு அகலமாகத் தோன்றுகிறது. இந்தப் பக்கத்தில் இரவு என்பதே கிடையாது. இங்கே வெப்பம் சுமார் 350 டிகிரி. இங்கே ஈயம் உருகி ஓடுகிறது. எங்கே பார்த்தாலும் பாலைவனமாகவே தெரிகிறது. அதில் தகதக என்று எரியும் அடுப்புச் சூட்டைப் போன்ற சூடு இருக்கிறது.

"அதனால்தான் சூரியன் குணம் புதனுக்கு உண்டு என்று சொல்கிறார்கள் போலிருக்கிறது" என்றாள் பாட்டி.

"இதை அடுத்தாற்போல் உள்ள இடத்தில் பாளம் பாளமாகத் தரை வெடித்துக் கிடக்கிறது. இங்கே ஓயாமல் புயல் காற்றுகள் வீசிக்கொண்டேயிருக்கின்றன. இங்கே எப்பொழுதும் சந்திவேளை.

"இதற்கும் அப்பால் உள்ளது புதனின் பின்புறம். இங்கே ஒரே இருட்டு. எப்பொழுதும் ஒரே இரவு. இங்கே பகல் என்பதே கிடையாது. எப்பொழுதும் நக்ஷத்திரங்கள் தெரிந்து கொண்டேயிருக்கும்."

"இதற்குச் சந்திரன் இல்லையா?" என்றான் ராதா.

"இதற்குச் சந்திரன் கிடையாது. அதோ பிரகாசமாகப் பெரிய நக்ஷத்திரத்தைப்போல் உள்ளங்கை அகலத்தில் தோன்றுவது என்ன தெரியுமா? அதுதான் நமது பூமி. இங்கே கீழே பாருங்கள். பனி, கட்டி கட்டியாகப் பாறை பாறையாக இறுகிக் கிடக்கிறது. வருஷம் முழுவதும்

புதன் (ஒளியான பாகம்)

முதல் பையன்: டேய், நான் உன் பல் எல்லாத்தையும் "உடைச்சு விடுவேன்.

இரண்டாமவன்: நீ மட்டும் உடைச்சியோ நான் உன்னைக் கடிச்சு விடுவேன்.

—வி. ஏ. சுந்தரமூர்த்தி, மதராஸ்-4

இப்படித்தான் இருக்கும். இங்கே தண்ணீர் மட்டும் அல்ல. சில வாயுக்கள் கூட உறைந்து போகும். அவ்வளவு குளிர்.''

``நினைத்தால்கூடக் குளிரும் போல் இருக்கிறதே'' என்றாள் ராதா.

``கண்ணா, இந்த நிறுக்கும் எந்திரத்தில் ஏறு. உன் எடை எவ்வளவு தெரியுமா? இருபது பவுண்டு.''

``என் எடை 80 பவுண்டு ஆயிற்றே'' என்றான் கண்ணன்.

``இது சிறிய கிரகம். இதன் அழுத்தம் குறைவு. ஆகையால், இதன் ஆகர்ஷண சக்தி குறைவு. ஆதலால்தான் உன் எடை கால் பங்கு ஆகிவிட்டது. ஆனால் இதில் ஒரு சௌகரியம் உண்டு. நீ பூமியில் குதிப்பதைவிட உயரமாகக் குதிக்கலாம். அங்கே தாண்டுவதைவிட நீளமாகத் தாண்டலாம். இங்கே யானையும் காண்டாமிருகமும் மானைப்போல் துள்ளி விளையாட முடியும்.''

``அது கிடக்கட்டும். இங்கே பார்க்க வேண்டியது ஏதாவது உண்டா? இங்கே மனிதர்கள் இருக்கிறார்களா?'' என்று கேட்டான் கண்ணன்.

``நீயே யோசித்துப் பார். இங்கே எப்படி மனிதன் இருக்க முடியும்? ஒரு பக்கம் நெருப்புப் போன்ற சூடு. மறு பக்கம் உயிரை ஒடுக்கும் குளிர். எங்குமே வாயு மண்டலம் இல்லை என்று சொல்லும்படி அவ்வளவு லேசானது. இது மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமே இல்லை.''

``நம்முடைய பூமாதேவிதான் நமக்கு ஏற்றது'' என்றாள் பாட்டி.

``அப்படியானால், அதற்கே திரும்பி விடுவோம்'' என்றார் விஞ்ஞானம்.

புதன் (இருண்ட பாகம்)

சாதுவின் சாபம்

ஸி. எஸ். விஜயா

ஓர் அரசன் தன் ராணியுடன் அடிக்கடி காட்டுக்கு வேட்டையாடச் செல்வான். ஒரு சமயம் அப்படி அவர்கள் இருவரும் வேட்டைக்குப் போயிருந்தார்கள். அவர்கள் தங்கியிருந்த இடத்துக்கு அருகில் ஒரு சிற்ருறு சல சலவென்று ஓடியது.

ராணிக்கு அதில் ஸ்நானம் செய்யவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. அதனுல், அங்கு யாரும் இல்லை என்ற தைரியத்தில் தன் நகைகளைக் கழற்றிக் கரை

மீது வைத்துவிட்டு, சில்லென்று ஓடும் அந்த ஓடையில் ஆனந்தமாய் நீராடினுள். பொழுது போவதே தெரியவில்லே. வெகுநேரம் நீராடி விட்டுக் கரையேறியதும் ராணி அங்கே தன் நகைகளைக் காணுது திடுக்கிட்டாள். அப்போது அவ் வழியே ஒரு சாது போய்க்கொண் டிருந்தார். அவர்தான் தன் நகை களை எடுத்திருக்கவேண்டும் என்று அவள் நினைத்தாள். உடனே ஓடிப் போய் இதை அரசனிடம் தெரிவித் தாள். அரசன் கோபம் கொண்டு உடனே அந்தச் சாதுவைப் பின் தொடர்ந்து சென்று அவரை வழி மறித்தான்.

விஷயத்தைச் சொல்லாமல் அவ ரிடம், "என்ன, கபடசந்நியாசியே. ஐயோ பாவம்! ஒன்றும் தெரியாது போல் இருக்கிறது! டேய்...நகை களைக் கீழே வைக்கிறுயா, இல்லே உன் மண்டையைப் பிளக்கட் டுமா?" என்ருன் அரசன்.

சாது, "என்னப்பா..நீ சொல் வது ஒன்றும் புரியவில்லேயே.." என்ருர் சாந்தமாக.

"ஓகோ..புரியவில்லேயா! என் மனேவி நகைகளை அந்த ஓடை யின் கரையில் வைத்துவிட்டு நீராடப் போனுள். திரும்பி வந்த தும் காணவில்லே. அவ்வழியே உன்னேத் தவிர வேறு யாரும் வர வில்லே. அதனுல் நீதான் எடுத் திருக்கிறுய் அவைகளை! அவற் றைத் திருப்பிக் கொடுத்தாயானுல் பிழைத்தாய். இல்லேயோ..இதோ என் கத்திக்கு இரையாவாய்!" என்ருன் அரசன்.

சாதுவுக்குக் கோபம் வந்து விட்டது.

"ஏ அரசனே, இந்த அற்ப நகைக்காக எனக்குத் திருட்டுப் பட்டம் சூட்டத் துணிந்தாயே! தீர ஆலோசிக்காமல் என்னே இப் படி அவமதித்தாயே...காடுகளில் கழுகுகளும் விலங்குகளும் நிறைய இருக்கின்றன. அதோ... அந்த மரத் தில் பார்! அந்தக் குரங்கின் கையில் என்ன இருக்கிறது, பார்! அதோ அந்த மரத்தில் பார். கழுகு உட் கார்ந்திருக்கிறது. அதன் கூடு பக் கத்திலேயே இருக்கிறது. அதில் ஏறிப் பார், உன் நகைகள் அவை களிடம் இருக்கின்றன!" என்ருர் அவர்.

அரசன் திக்பிரமையுடன் திரும் பிப் பார்த்தான். ஆம்; நிஜ மாகவே ஒரு மரத்தில் குரங்குகள் சில நகைகளை அழகு பார்த்துக் கொண்டிருந்தன. பளபளவென்று ஏதோ ஒரு நகையை மூக்கால் கொத்தி இப்படியும் அப்படியும் ஆட்டிக் குஞ்சுகளுக்கு விளையாட் டுக் காட்டிக்கொண்டிருந்தது ஒரு கழுகு. அரசன் வாயடைத்து நின்ருன்.

சாது, "ஒரு குற்றமும் அறியாத என்னே ஆலோசியாமல் அவமதித் துப் பேசிய உனக்கு இதோ, இந்தச் சாபம்! இளம் வயதின் முறுக்கினுல் யாரிடம் பேசுகிருேம் என்று அறியாமல் நீ என்னேக் கண்டபடி பேசினுய். இனி அந்த யௌவனம் மறைந்து நீ வயோதிக னுவாய். போ..! இனிமேலாவது எதிலும் ஜாக்கிரதையாக இரு. யாரையும் முன் பின் ஆலோசி யாமல் ஏசிப் பேசாதே" என்று கூறிச் சென்ருர்.

மறு நிமிஷம் இருபத்தைந்து வயதான அரசன்-எழுபது வயதுத் தொண்டுக் கிழவனுய் மாறினுன். தூரத்திலிருந்து இதைக் கவனித்த ராணி, "ஐயோ..இதென்ன விப

"ரீதம்" என்று ஓடோடியும் வந்தாள். "ஐயோ.. தப்பு முழுதும் என்னுடையதே. அஜாக்கிரதையாக நகைகளைக் கரையில் வைத்ததுமல்லாமல் ஒரு சாதுவைச் சந்தேகித்து உங்களை ஏவினேனே! அந்தோ.. இப்போது அவர் சாபத்துக்கு உள்ளானோமே.. இனி நான் என்ன செய்வேன்?" என்று அழுதாள். பிறகு மெள்ள அரசனைக் கைப்பிடித்து, கூடாரத்துக்கு அழைத்து வந்தாள். அங்குள்ள ஆட்களிடமும் மந்திரியிடமும் விஷயத்தைச் சொன்னாள். எல்லாரும் ஒரே துக்கத்தில் ஆழ்ந்தார்கள்.

இப்போது மந்திரியின் மூளை தீவிரமாய் வேலை செய்ய ஆரம்பித்தது. கெட்ட எண்ணம் விஷம் போல் அவன் மனத்தில் பரவியது. 'அரசன் இனி அதிக நாள் உயிருடன் இருக்கமாட்டான். இது எப்படியும் நிச்சயம். அவனை நாம் இன்னும் முன்னாலேயே கொன்றுவிட்டால் நாமும் இந்த ராணியுடன் ராஜ்யத்தையும் ஆளலாம் அல்லவா?' என்று எண்ணினான்.

எல்லாரும் அரண்மனைக்குத் திரும்பினார்கள். ஊரே துக்கத்தில் ஆழ்ந்தது. மந்திரி மெள்ளத் தன் கெட்ட எண்ணத்தைச் செயலில் காண்பிக்க ஆரம்பித்தான்.

மெள்ள ராணியிடம் சென்று, "மகாராணி.. அரசர் கிழப்பருவம் அடைந்தது வருந்தத்தக்கதுதான். இருந்தாலும் ராஜ்ய விஷயம் முக்கியமல்லவா? அரசரால் ஒன்றுமே முடியவில்லை. தள்ளாமை. எல்லாம் மறந்து மறந்து போகிறது. தக்க வாரிசும் ஒன்றுமே இல்லை. இப்பொழுது சகல காரியமும் நான்தான் செய்கிறேன்" என்றான் அசட்டுச் சிரிப்புடன். ராணிக்கு அவனுடைய மோசக் கருத்து ஒருவாறு புரிந்தது.

"சீ.... துஷ்டா...... இது சாபக்கேட்டினால் வந்த வயோதிகம். இதைப் போக்கடிக்க எனக்குச் சக்தி உண்டு. நீ போய்வரலாம்.." என்றாள் கோபத்துடன்.

"ஹூம்..உன்னால் முடியுமா..? பார்க்கலாம். உன்னாலும் முடியாது..உன்னைப் படைத்தவனாலும் இனி முடியாது...பார்த்துக் கொண்டே இரு. இந்த மந்திரியே அரசனாகி....உன்னை அடிமையாக்காவிட்டால் பார்!" என்று கறுவிக்கொண்டே சென்றான்.

ராணிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. யாருக்கும் தெரியாமல் மாறுவேடம் போட்டுக் கொண்டு காட்டுக்கு ஓடினுள். சாபம் கொடுத்த சாதுவைத் தேடிக் கண்டுபிடித்தாள். அவர் காலில் விழுந்து தன் கஷ்டத்தைச் சொல்லி அழுதாள்.

"சுவாமி..நான் செய்த தவற்றுக்கு இந்தத் தண்டனை போதும். இனி விமோசனம் தந்தருளுங்கள். சுவாமி... தயை செய்யுங்கள்" என்று கதறினுள்.

சாதுவின் மனம் நெகிழ்ந்தது. "குழந்தாய், அரசனை மன்னித்தேன். இந்தா..இதோ..இந்தப் பழங்களை எடுத்துச் சென்று உன் கணவனைப் புசிக்கச் சொல். அவன் பழைய ரூபமடைவான்" என்று சில மாம்பழங்களை அவளிடம் கொடுத்தார். ராணி ஓட்டோடியும் சென்றுள்.

அரண்மனைக்குச் சென்ற ராணி தான் எப்போதும் செய்யும் பூஜையைவிட, மறுநாள் இன்னும் பிரமாதமாகச் செய்ய ஏற்பாடு செய்தாள். ஒரு பிராமணனைக் கூப்பிட்டுச் சாப்பிடச் சொல்லி ஏற்பாடு செய்தாள்.

மறுநாள் பூஜை யெல்லாம் அமர்க்களமாய் நடந்தது. ராணி தானே பிராமணருக்குப் போஜனம் பரிமாறினுள். பிறகு அவள், 'இந்தப் பிராமணன் வயதானவராக இருக்கிறுர். அந்த மாம்பழத்தில் ஒன்றை இவருக்குப் போட்டுத்தான் பார்ப்போம்' என்று எண்ணி ஒரு பழத்தைக் கொண்டு வந்து அவருக்குப் போட்டாள். பிராம்மணன் பழத்தைப் பாதி தின்னும்போதே மரணமடைந்து இறந்துவிட்டார். இதைக் கண்ட ராணி, "ஐயோ..மாம்பழத்தைத் தின்றுல் சிறுபிராயத்தை அடைவார்கள் என்று சாது சொன்னது பொய்யா? எதற்கும் அவரையே போய்க் கேட்போம்" என்று திரும்பவும் சாதுவிடம் ஓடினுள். அவரிடம் விஷயத்தைச் சொன்னுள். சாது சற்று யோசித்தார். பிறகு புன்முறுவலுடன், "குழந்தாய், இந்தப் பிராமணனுடைய வீட்டில் ஒரு நல்ல பாம்பு வந்தது. அதைக் கொல்லாமல் ஒரு குடத்தில் பிடித்துக் காட்டுக்குக் கொண்டு போய், குடத்துடன் வைத்துவிட்டான். குடத்தின் மூடியை இறுக மூடிவிட்டதால் பாம்பு உள்ளேயே கிடந்து சில காலம் தவித்தது. பிறகு யாரோ வழிப்போக்கன் அதைத் திறந்தான். பாம்பு வெளியே ஓடி வந்து மறைந்தது. அப்போது முதல் அந்த நாகம் இந்தப் பிராமணனைக் கறுவிக் கொண்டிருக்கிறது. நீ பழங்களை வைத்திருந்த இடத்துக்கு வந்து அவனுக்கு அதைப் போடுமுன் அதில் விஷத்தைக் கக்கிவிட்டது. அதனுல்தான் அதைக் கடித்ததும் அவன் இறந்தான். பயப்படாமல் போ. உன் கணவனுக்கு அந்தப் பழத்தைக் கொடு. அவன் பழைய ரூபம் அடைந்தே தீருவான்" என்று ஆசீர்வதித்து அனுப்பினுர்.

ராணி சந்தோஷத்துடன் அரண்மனைக்குத் திரும்பினுள்.

ராணி காட்டுக்குச் சாதுவைப் பார்க்கச் சென்றதும், மந்திரி ராணியின் அந்தப்புரத்தில் நடந்தது என்னவென்று விசாரித்தான். தாதிகள் ராணி சாதுவிடம் சென்று பழம் வாங்கி வந்ததையும், அதில் ஒன்றை ஒரு பிராமணனுக்குக் கொடுத்தது, பிறகு அரசருக்குக்

கொடுக்கவேண்டும் என்று அரசி சொன்னதையும், பிறகு அந்தப் பழத்தைப் பிராமணன் தின்றதும் இறந்ததையும் சொன்னார்கள்.

மந்திரி, "இப்போது அரசி எங்கே?" என்றான். "சாதுவிடம் போயிருக்கிறாள்" என்றாள் தாதி.

மந்திரி ஓர் ஏளனப் புன்னகையுடன், "ஹூம்.. அவன் ஒரு கபட சந்நியாசியாகத்தான் இருக்கவேண்டும். விஷப்பழங்களைக் கொடுத்து அரசனை இறக்கச் செய்து இங்கே தான் புகுந்துகொள்ளலாம்; அரச பதவி அடையலாம் என்று சூழ்ச்சி செய்தான் போலும்..." என்று எண்ணிக்கொண்டே பழங்களை எடுத்துச் சென்றான்.

அரசி வருமுன் யாருக்கும் தெரியாமல் அரசனுக்குப் பழங்களை நறுக்கிக் கொடுத்து அவனைச் சாகடித்து விடலாம் என்று எண்ணி அவசரமாகப் பழங்களை நறுக்கினான். யாரும் கவனிக்காமல் இருக்கும்போது அதைக் கொண்டுபோய் அரசனிடம் வைத்து, "அரசே இந்தப் பழங்களைத் தங்களுக்கு என்று வெகு தூரத்திலிருந்து கொண்டு வந்தேன். சாப்பிட்டுப் பாருங்கள்" என்றான். 'தின்று சாகட்டும் கிழட்டு சனியன்' என்று மனசுக்குள் எண்ணிக்கொண்டே வெளியே வந்து கதவைச் சாத்திவிட்டான். எப்படியும் அரசன் இறந்துவிடுவான் என்ற தைரியத்தில் ஆட்களிடம், "இன்று அரசரின் உடம்பு சரியில்லை. இன்றோ நாளையோ என்றிருக்கிறது. வைத்தியரை அழைத்து வருகிறேன் என்றால் வேண்டாம் என்கிறார்!" என்று கூறினான்.

ராணி அரண்மனைக்கு வந்து சேர்ந்ததும், "பழங்கள் எங்கே?" என்றாள். மந்திரி எடுத்துப்போனதாகத் தாதிகள் சொன்னார்கள்.

உடனே ராணி மந்திரியிடம் சென்று; "பழங்களை ஏன் எடுத்தாய்?" என்றாள் அதட்டலாக. "அந்த விஷப் பழத்தால் இன்றே அரசனைக் கொல்லப் பார்க்கிறாயா? அதை உன் கையால் செய்ய நான் விடுவேனா? அதை நானே அரசனுக்குக் கொடுத்துவிட்டேன்" என்றான் மந்திரி சந்தோஷத்துடன். இதற்குள் அரசன் இறந்திருப்பார் என்று அவன் எண்ணியிருந்தான்.

ஆனால் அரசி, "ஹூம்..யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப் போட்டுக்கொண்டதாம்" என்று சொல்லிக்கொண்டே அரசனிருக்கும் இடம் ஓடினாள்.

ராணி சொன்னதன் அர்த்தம் விளங்காத மந்திரி அவளைப் பின் தொடர்ந்தான். 'அரசன் இறந்திருப்பான். அதைப் பார்த்து ராணி அழுதுகொண்டிருப்பாள்' என்று எண்ணிக்கொண்டே சென்ற மந்திரி திகைத்து நின்றான்.

அரசன் பழைய ரூபமடைந்து, சந்தோஷத்துடன் ராணியோடு பேசிக்கொண்டிருந்தான்.

மந்திரி செய்த துரோகத்தையும் அவன் துர் எண்ணத்தையும் ராணி அரசனிடம் சொன்னாள். சாதுவிடம் சென்ற விஷயத்தையும் சொன்னாள்.

மந்திரியின் துரோகத்துக்காக அரசன் அவனை நாட்டை விட்டே விரட்டினான். பிறகு ராணியிடம், "அவன் கெட்டது செய்யப்போக நன்மையாகவே முடிந்தது" என்றான்.

பிறகு ராணியும், அரசனும் வெகு காலம் ராஜ்யத்தைச் சீரும் சிறப்புமாக ஆண்டு வந்தார்கள்.



பட்டம் பார்

'ரமணன்'

ஆடி ஆடி ஏறுது
அசைந் தசைந்து ஏறுது
வாடிக் கண்ணே மாடிமீது
வந்து பட்டம் பாரடி! 1

மெல்ல மெல்ல ஏறுது
வேக மாக ஏறுது
துள்ளி வரும் காகத்தோடு
துரத்திச் சண்டை போடுது! 2

குருவி போல வானிலே
குட்டிக் கரணம் போடுது
மருவி வரும் காற்றில்சற்று
மயங்கி நின்று உறங்குது! 3

வெட்டி வெட்டி ஏறுது
மின்னல் போலத் துள்ளுது
வட்டமிட்டுக் கழுகு போல
வான மெங்கும் சுற்றுது! 4

வீசி வீசி ஏறுது
மேலே மேலே ஏறுது
ஆசைக் கண்ணே ஓடிவந்தே
அதி சயத்தைப் பாரடி! 5

பாட்டிலில் கப்பல்!

கே. எஸ். பி.

பெரும்பாலான மாலுமிகள் கைத்திறன் நிரம்பப் பெற்றுள்ளனர். பெரிய கடல்களிலும் பிரவாகம் நிறைந்த இடங்களிலும் அவர்கள் பிரயாணம் செய்யும்போது சோம்பல் முறிப்பதில்லை. ஒவ்வொரு கணத்தையும் அவர்கள் உபயோகப் படுத்துகின்றனர். அவர்கள் உண்டாக்கும் ஆச்சரியமான பொருள்களுள் பாட்டிலில் மிதக்கும் கப்பலும் ஒன்று. இக்கப்பல்களால் அவர்கள் தம் கப்பல்களின் அடித்தளத்தை அலங்கரிக்கின்றனர். மேலும் கரையை அடைந்ததும் இதை அவர்கள் பரிசாகவும் அளிக்கின்றனர்.



இதை எப்படிச் செய்வது? இது பெரிய வேலை அல்லவா? உலகில் யாரால்தான் பாட்டிலின் குறுகிய கழுத்தின் மூலம் ஒரு காகிதக் கப்பலை உள்ளே நுழைக்க முடியும்?

செய்யும் முறை:

இதைச் செய்வதில் ஒரு தந்திரம் உள்ளது. அதைத் தெரிந்து கொண்டாலும் கப்பலைச் செய்து காட்டுவது அவ்வளவு சுலபமல்ல.

இதைச் செய்ய சாதுரியம், பொறுமை இவைகளோடு நுண்ணிய அறிவும் வேண்டும். சற்றுக்கூடப் பிசகக் கூடாது.

முதலில் கப்பலின் மேல்பாகத்தைச் செய்து கொள்ளுங்கள். பிறகு அத்துடன் பாய்மரத்தினைச் சேர்த்துக் கொள்ளவேண்டும். பாய்மரத்தைக் கயிற்றின் உதவியால் பாட்டிலின் கழுத்தை அடையும்போது சுருங்கிக் கொள்ளும்படி இருக்கவேண்டும். மூன்று அல்லது நாலு கயிற்றை இத்துடன் சேர்த்துக் கட்டவேண்டும். பாய்மரம் உள்ளே நுழைந்ததும் இந்தக் கயிற்றின் உதவியால் அதை மேலே நிமிர்ந்து நிற்கும்படி உயர்த்திக்கொள்ள வேண்டும்.

இப்பொழுது அசல் கப்பல் பாட்டிலில் நீந்தும். பாட்டிலில் தண்ணீர் நிறைய இருக்கவேண்டியதில்லை சாய்வாகச் சாய்த்தால் பாட்டிலின் பாதி உயரத்திற்குத் தண்ணீர் இருந்தால் போதும்.

பிறகு வெளிப்பக்கத்தில் தண்ணீர் உயரத்திற்கு நீல வர்ணம் தீட்டிவிட்டால் கடல் உண்டாகிவிடும். அப்போது பார்த்தால் அசல் அரபிக்கடல் போல இருக்கும். இதுதான் நீங்கள் செய்யவேண்டியது.

உடனே அதில் ஏறிக்கொண்டு பம்பாய்க்கோ கல்கத்தாவுக்கோ கற்பனைப் பிரயாணம் செய்யவேண்டியதுதான்!

அபாயச்சங்கு

'நீலம்'

அபாயச் சங்கு சென்னைக்கு வந்து, பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கிட்டத்தட்ட ஐந்தாறு மாதங்கள் ஆகிவிட்டன. இதற்குள் அவன் மாமாவுக்குத் தெரிந்தும் தெரியாமலும் எவ்வளவோ ரகளைகள் செய்து விட்டான். நாளொரு கலாட்டாவும் பொழுது ஒரு புகாருமாகப் பல அக்கப்போர்களை உண்டு பண்ணிக்கொண் டிருந்தான். இருந்தும் அபாயச்சங்கு கால் வருஷப் பரீட்சையில் எப்படியோ அபாரமாக மார்க்குகள் வாங்கியிருந்தான். காப்பி அடித்திருப்பானோ என்றால் அதற்கும் இடமில்லை. ஏனெனில் இவனுடைய சுபாவம் தெரிந்துதான் பள்ளிக் கூடத்தில் அவனைத் தனியாக ஓர் அறையில் உட்கார வைத்துப் பரீட்சை எழுதச் சொல்லியிருந்தார்கள். ஆகவே இவன் விஷமம் செய்வதில் எவ்வளவு கெட்ட பெயர் எடுத்திருந்தானோ அதே அளவுக்குப் படிப்பிலும் சூடிகை என்று பெயர் ஏற்பட்டது. இருந்தாலும் மற்ற மாணவர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் இவனிடம் ஏதோ ஒரு தப்பு அபிப்பிராயம்; சந்தேகம்.

அன்று ஒரு நாள் பள்ளிக்கூடக் கட்டிட உதவி நிதிக்காக ஒரு நடனக் கச்சேரிக்கு ஏற்பாடாகியிருந்தது. அதற்கு இவனை அழைத்துப் போகவில்லை.

"ஏண்டா, நீ வரவில்லையாடா?" என்று பையன்கள் கேட்ட

போது அவனுக்கு மிகவும் அவமானமாக இருந்தது.

கேவலம் தான் படிக்கும் பள்ளிக்கூடத்திலே நடக்கும் ஒரு டான்ஸைப் பார்க்கக்கூட அல்லவா வழியில்லை! உபாத்தியாயர்களும், மற்ற மாணவர்களும் தன்னை வேண்டும் என்றுதானே இப்படி வரவொட்டாமல் செய்திருக்கிறார்கள்? இதை ஒரு கை பார்த்து விடுவது என்று தீர்மானித்து விட்டான் அபாயச் சங்கு.

அன்று நடனத்துக்குப் பின் பாட்டுப் பாடுபவர்கள் இறங்கியிருந்த விடுதிக்குப் போனான். மாலை சுமார் ஐந்து மணி இருக்கும். மிருதங்கம், பிடில், தம்பூரா முதலியன வெல்லாம் அங்கே தயாராக இருந்தன. நட்டுவனார் ஹாலின் நடுவே வீற்றிருந்தார். அவர் பக்கத்தில் வெல்வெட்டினால் தைத்த குழி ஜால்ரா வைக்கும் பை இருந்தது. அபாயச் சங்கு அங்கே போய் மெதுவாக வட்டமிட்டான். யாரோ பள்ளிக்கூடப் பையன் வேடிக்கைப் பார்ப்பதாக எண்ணிக்கொண்டு யாரும் அவனைக் கவனிக்கவில்லை.

நாழிகை ஆகிவிட்டது. ஆகவே டான்ஸ் கோஷ்டியாரை அவசரப் படுத்தி நடன ஹாலுக்கு அனுப்பிக்கொண் டிருந்தார் நட்டுவனார். இந்தச் சந்தடியில் அபாயச் சங்கு குழி ஜால்ரா இருந்த வெல்வெட் பையை மெதுவாகக் குனிந்து இழுத்து அதைத் தன் 'டிரௌஸர்' பையில் பத்திரப் படுத்திக்கொண்டு விட்டான்! வெளியே போனவர்களோடு அவனும் கிளம்பினான். நட்டுவனார் ஜால்ரா பையைத் தேடினார். அது அங்கே இல்லை. ஒருகால் முன்னால் போனவர்கள் அதை எடுத்துப் போயிருப்பார்கள் என்று எண்ணி அதைத் தேடாமல் அலட்சியமாக அவரும் நடன ஹாலுக்குப் போய்விட்டார்.

மணி ஆறு அடித்தது. ஹாலில் டான்ஸ் ஆரம்பமாக வில்லை. நட்டுவனார் குழி ஜால்ராவைத் தேடிக்கொண்டே இருக்கிறார். அது கிடைத்தவுடன் டான்ஸ் ஆரம்பமாகிவிடும் என்று ஹாலுக்கு வெளியே பலர் பேசிக்கொண்டிருந்தார்கள். அபாயச் சங்குக்கும் இந்தச் செய்தி எட்டியது. அப்போது ஹாலுக்குள்ளிருந்து ஒரு பேர் வழி, நட்டுவனார் ஜாகைக்கு ஜால்ராவை எடுத்து வர ஓடியதையும் அவன் பார்த்தான். இதன் காரணம் தெரிந்த அபாயச் சங்கு, தன் பையிலிருந்த அந்த வெல்வெட் பையை வெளியே எடுத்துக்கொண்டு, "இதோ இருக்கு ஜால்ரா பை!" என்று வாசலில் இருக்கும் டிக்கெட் கலெக்டர்களை யெல்லாம் ஏமாற்றிவிட்டு உள்ளே விழுந்தடித்து ஓடிவிட்டான்!

நேரே நடனம் நடக்கவிருந்த மேடைக்கே போய் நட்டுவனாரிடம் ஜால்ராவைக் கொடுத்து விட்டான். தன்னை அழைக்காமல் சென்ற ஆசிரியர்களையும், மாணவர்களையும் மேடையிலிருந்தபடியே, ஏளனமாகப் பார்த்துப் புன்சிரிப்புச் சிரித்தான். ஒரு பகுதியிலிருந்த மாணவர்கள் அபாயச் சங்கைப் பார்த்துக் கர கோஷம் செய்தார்கள்.

அபாயச் சங்கு எப்படி உள்ளே வந்தான் என்று ஆசிரியர்களுக்கு, முக்கியமாகக் கோணமண்டைக்கு ஆச்சரியமா யிருந்தது.

ஆனால் அவன் அங்கே வந்து ஏதாவது கலாட்டா செய்வான் என்றே அவனை விலக்கி யிருந்தார்கள். தன்னை வேண்டாம் என்று விலக்கினாலும் அது நடைபெறாதென்று அவர்களுக்குத் தெளிவு படுத்த வேண்டும் என்பதுதானே அபாயச் சங்கினுடைய ஆசை? அதை அவன் நிறைவேற்றி விட்டான்.

டிக்கெட்டில்லாமலும் ஆசிரியர்களின் தயவு இல்லாமலும் அவன் எப்படியோ நடனம் பார்த்து விட்டான். பரீட்சைக்குப் பிறகு விடுமுறை விட்டிருந்தார்கள். இந்தச் சமயத்தில்தான் அந்தக் கிரிக்கெட் மாட்சும் வந்து சேர்ந்தது.

கும்பாபிஷேகம், கல்யாணம், அன்னதானம் முதலியவற்றிற்கு என்று ஓயாமல் ஒழியாமல் அநேகர் மாமாவிடம் வந்து பிராணனை வாங்கி அவரிடம் ஐந்து, பத்து என்று வாங்கிப் போவது அபாயச் சங்குக்குத் தெரியும். அவன் காதுப் படவே சுந்தரவதனம் பல சமயம், "இந்த உதவி நிதி, யாசகம் இதெல்லாம் என்று ஒழியப்போகிறதோ! பொழுது விடிந்தால் யாராவது பிச்சைக்கு வந்து நிற்கிறார்களே!" என்று அலுத்துக் கொள்வதும் அவனுக்குத் தெரியும். அப்படியெல்லாம் தாராளமாக நன்கொடையளிக்கும் மாமா, ஒரு நாடகத்துக்கோ, ஸினிமாவுக்கோ அழைத்துப் போவதில்லை. இப்போது கிரிக்கெட் மாட்ச் வந்திருக்கிறது. இதற்கும் அவர் காசு கிடையாது என்றுதான் அதட்டிக் கையை விரிப்பார். ஆனால் பட்டணத்திலிருந்து கொண்டு, அதுவும் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் கிரிக்கெட் மாட்ச் பார்க்காமலிருப்பதா? அப்படியும் ஒரு பிறவியா? எப்படியானாலும் சரி. இந்த மாட்சை நம் கோஷ்டியோடு போய்ப் பார்த்துத் தானாக வேண்டும். காசுக்கு என்ன செய்வது? கடைசியில் ஓர் அருமையான யோசனை அவனுக்குத் தோன்றியது. அதை நிறைவேற்றினால் மாமாவுக்கு ஏற்படும் தொல்லைகளும் இனி இராது. நண்பர்களோடு ஆனந்தமாகக் கிரிக்கெட்

டைப் போய்ப் பார்த்துவிட்டும் வரலாம். நல்ல வேளை மாமா அன்றும் வீட்டில் இல்லை. 'ரோஸ்' மட்டும் தாழ்வாரத்தில் தூங்கிக் கொண்டிருந்தது. அதை எழுப்பினான். 'லொட்' என்று அதன் தலையில் ஒரு தட்டுத் தட்டி அதன் தூக்கக் கலக்கத்தைப் போக்கினான். தனக்கு ஆகாரம் தரும் தன் சின்ன எசமான் அடிக்கடி இப்படி கொடுத்துவந்த அடிகளையெல்லாம் பொறுத்துக்கொண்டது 'ரோஸ்.' தன்னை அவன் அடிப்பதுகூடத் தன்னுடைய நன்மையை உத்தேசித்துத்தான் என்று அது எண்ணுவதாகவே அபாயச் சங்கு நினைத்தான். ஏனெனில் அடியை வாங்கிக்கொண்ட பிறகும் ரோஸின் சந்தோஷ வாலாட்டம் நிற்கவில்லை!

அபாயச் சங்கு ஒரு சிறிய அட்டையை எடுத்து, "ரோஸ் பிறந்து ஆண்டு ஒன்று பூர்த்தியாகி நாளை மறு தினம் பிறந்த நாள் வருகிறது. இதைக் கொண்டாடப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. தங்களால் முடிந்ததைக் கொடுத்து உதவி, பிறந்த தின விழாவைச் சிறப்பித்து, ரோஸையும் ஆசீர்வதிக்க வேண்டிக்கொள்ளப்படுகிறது" என்று மையினால் எழுதினான். அதை ஒரு நூலினால் ரோஸின் கழுத்தில் கட்டினான்.

முதலில் ரோஸ் இதைப் போட்டுக்கொள்ளக் கழுத்தைக் காட்டாமல் மறுத்துப் பிகு செய்தது. ஆனால் அவன் அதற்கு ஒரு பிஸ்கோத்தை லஞ்சம் கொடுத்து அதைச் சரிப்படுத்தி விட்டான். இன்னொரு காகிதத்தை எடுத்தான். ஏழு எட்டுப் பெயர்களைத் தானே எழுதினான். அந்தப் பெயர்களுக்கு நேரே ஒரு ரூபாய், எட்டணா, 4 அணா, 2 அணா என்று அவர்கள் எல்லாம் பிறந்த நாளுக்கு நன்கொடை அளித்திருப்பதாக எழுதிக்கொண்டு வெளியே புறப்பட்டான். குங்குமப் பொட்டோடும் கழுத்தில் கட்டிய அட்டையோடும் 'ரோஸ்' நிதி வசூலுக்குப் புறப்பட்டுவிட்டது!

மாமாவிடம் யார் யார் வந்து நன்கொடை கேட்டார்களோ அவர்களை எல்லாம் போய்ப் பார்த்து நிதி உதவக் கேட்டான். சிலர் இந்த ஆச்சரியத்தைப் பார்த்துச் சிரித்தார்கள். "சின்னப் பையன் ஏதோ நாயிடம் உள்ள விசேஷப் பிரியத்தால் இப்படிச் செய்கிறான்" என்று சிலர் 2 அணா முதல் இரண்டு ரூபாய் வரை பொருள் உதவி செய்தார்கள். இப்படியாக அன்று முழுதும் சுற்றி மொத்தம் ஏழெட்டு ரூபாய் சேர்த்துவிட்டான்.

மாமி தன் சொந்தக்காரர் வீட்டுக்கு மாம்பலம் போயிருந்தாள். வீடு பூட்டியிருந்தது. ஆகவே, வாசல் கம்பி வழியாக ரோஸை உள்ளே நுழையும்படி மெதுவாக பிடித்துத் தள்ளினான். மணி 11 அடிக்க இன்னும் பதினைந்து நிமிஷமே பாக்கி. 11 மணிக்கு மாட்ச். அவனுக்கு அவசரம் தாங்க முடியவில்லை. கையிலே காசு சேர்ந்துவிட்டது. இனி என்ன தயக்கம்? வழியில் தென்பட்ட இரண்டு மூன்று நண்பர்களைக் கூட்டிக் கொண்டு கிரிக்கெட் மைதானத்தை நோக்கி விட்டான் சவாரி!

அடுத்த இதழில் முடிவுறும்.

கண்ணன் தபால்

உங்கள் சந்தேகங்கள்

த. கு. இலக்குமணன், தளவாளப்பட்டு.

1. காற்றும் புகமுடியாத இடத்துக்கு எதனாலாவது போக முடியுமா?

> முடியும்; கற்பனையினால்!

2. கண்ணனுக்கு எந்தவிதமான கட்டுரை, கதைகள் அனுப்பலாம்?

> நீ பத்திரிகையைப் பிரித்ததும் எதை முதலில் விரும்பிப் படிப்பாயோ அதேபோல எழுதேன்; போதும்.

3. ‘பரம முட்டாள்’ யார்?

> பிறர் சொல்லியும் தெரிந்துகொள்ளாமல் தனக்காகவும் தெரியாமல் திண்டாடுபவன்தான்.

4. கிரகணங்கள் அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களில் மட்டும் வரக் காரணம் என்ன?

> அந்த ஒரு நாளில்தான் சூரியன், பூமி, சந்திரன் மூன்றும் நேராக ஒரே நிலைக்கு வருகின்றன. சந்திரனோ பூமியோ நடுவில் இருந்து சூரியனை மறைப்பதனால்தான் கிரகணம் ஏற்படுகிறது.

5. காற்று சத்தம் செய்யக் காரணம் என்ன?

> காற்று அமுக்கம் அதிகமாகவுள்ள இடத்திலிருந்து அமுக்கம் குறைவாயுள்ள இடத்தை நோக்கி வேகமாக வீசுகிறது. குறிப்பிட்ட திசையில் அதிக வேகமாகக் காற்று செல்வதால்தான் சத்தம் ஏற்படுகிறது.

R. குப்புசாமி, சென்னை - 21.

6. ஆங்கிலேயரின் குழந்தைகளைச் சமுத்திர நீரில் ஏன் குளிப்பாட்டுகிறார்கள்?

> உப்பு நீரில் குழந்தைகளை நீராட்டுவதால் தேக ஆரோக்கியமும் சுறுசுறுப்பும் ஏற்படுகிறது. அத்துடன் ரத்தமும் சுத்தமடைகிறது. அந்த நாட்டுச் சீதோஷ்ண ஸ்திதிக்கு அது ஏற்ற முறை.

7. சுபாஷ்போஸ் உண்மையிலேயே உயிருடன் இருக்கிறாரா?

இல்லை. அவர் அஸ்திகூட ஜப்பானில் ஓர் ஆலயத்தில் இருப்பதாகத் தெரிகிறது.

8. போட்டோ காமிராவை முதலில் கண்டு பிடித்தவர் யார்?

ஜோசப் நீப்ஸ். (விவரங்களுக்கு கண்ணன்-ஜூலை'52 இதழைப் பார். ஆ-ர்)

V. வேங்கடரமணன், ஞானவொளிவுபுரம்.

9. உலகம் சுற்றுவது நமக்குத் தெரியவில்லையே, ஏன்?

ஒரு நாளில் பூமி தன்னைத்தானே ஒரு சுற்றுச் சுற்றி விடுகிறது. இவ்வளவு வேகத்தில் பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்வதால்தான் பூமி சுற்றுவது நமக்குத் தெரியவில்லை. கிளியையும் கூண்டையும் வேகமாகச் சுற்றும்போது கிளி கூண்டிற்குள் ஸ்திரமாக இருப்பதாகத் தெரிகிறதல்லவா? அதுமாதிரிதான்!

P. அமீர்ஹம்சா, முருக்கங்குடி.

10. 'யூகிவாரிசு' என்ற படம் சென்னை ராஜதானி முழுவதும் திரையிடப்பட்டிருக்கிறதா?

சில பெரிய நகரங்களில் மட்டுமே திரையிடப்பட்டிருக்கிறது.

11. சினிமாவைக் கண்டுபிடித்தது யார்?

ரேனோ என்ற பிரெஞ்சுக்காரர். பிறகு முறையாக அமைத்தது எடிஸன். இவர் அமெரிக்கர்.

12. சென்னையில் நடந்த மல் யுத்தப் போட்டியில் ஜயித்த மல்லர்கள் யார்?

கிங்காங், தாராசிங்.

P. லக்ஷ்மிநாராயணன், சென்னை - 5.

13. உலகத்திலேயே கிரிக்கெட்டில் சிறந்த பாட்ஸ்மென் யார்?

பிராட்ஸ்மன்.

M. சுப்பிரமணியன், பதுளை, சிலோன்.

14. இந்திய சிங்கம் தாராவைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

தலைசிறந்த பயில்வானாக விளங்கப் போகிறார் என்பதுதான்.

எஸ். வி. சக்திவேல், தென்புத்தூர்.

15. அண்ணா, திடீரென்று தங்களுக்கு ஆயிரம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்?

ரூபாயே கிடைக்கவில்லை என்று எண்ணிக்கொண்டு, பஞ்ச நிவாரண நிதிக்கு அந்தப் பணத்தை அப்படியே அனுப்பி விடுவேன்.

16. பத்திரிகைகளில், 'மலர், இதழ்' என்று போடுவதன் காரணம் என்ன?

அந்தப் பத்திரிகை ஆரம்பித்து எத்தனை வருஷம் ஆயிற்று என்பதை 'மலர்' குறிக்கும். 'இதழ்' என்பது அந்த வருஷத்தில் எத்தனை மாதம் ஆகியிருக்கிறது என்பதைக் குறிப்பிடும்.

17. முகத்தில் கண்ட ஸ்நோ போடுவதால் நன்மையா, தீமையா?

தீமை. கண்ட ஸ்நோவைப் போடுவதால் முகத்தில் திட்டுத் திட்டாகப் படிந்து வேர்வைத் துவாரங்களை எல்லாம் அடைத்து விடுகிறது. அழுக்குகள் எல்லாம் வெளிவர வழியில்லாமல் ரத்தத்தில் கலந்து முகத்தில் விகாரமான கொப்புளங்களும் கட்டிகளும் ஏற்படுகின்றன. நாளடைவில் முகமும் களை இழந்து கறுத்துப் போய்விடுகிறது. சாதாரணமாகவே வெளியில், வெயிலில் எங்கேயாவது போய்விட்டு வந்தால் முகத்தைக் குளிர்ந்த நீரில் கழுவிக் கொள்வது நலம்.

* * * *

பாப்பாவும் நாய்க்குட்டியும்

சின்னஞ் சிறு நாய்க்குட்டி
செவி மடிந்த நாய்க்குட்டி
உன்னைப் பார்க்கும்போதெல்லாம்என்,
உள்ளம் பொருமை கொள்ளுது!
அப்பா, அம்மா உன்னையே
அன்பாய் வைத்துக் கொள்வதேன்?

நாய்க்குட்டி:

ஆவலோடு நீ கேட்கிருய்,
ஆதலால் நான் சொல்லுகிறேன்.
வீட்டார் இட்ட கட்டளையைத்
தட்டாமலேயே செய்கிறேன்.
இரவெல் லாம்நான் விழிக்கிறேன்.
கருத்தாய் வீட்டைக் காக்கிறேன்.
வேற்ருள் நுழைய மறுக்கிறேன்.
வேதனை யற்று இருக்கிறேன்.
வீட்டில் கவலை யுண்டானல்
விளையாடி நான் மகிழ்விப்பேன்.
உண்ட வீட்டிற் கொருநாளும்
இரண்டகம் நான் செய்திடேனே.

பாப்பா:

சின்னஞ் சிறு நாய்க்குட்டி
சிறந்த பாடம் கற்றேன்நான்!
நன்றி கெட்ட மாந்தர்க்கும்
நன்றி தந்து உதவிடேன்!

—சர்யற்பாண்டியன்—கோயில்பட்டி.

பல நாள் திருடன்!

அண்ணு! வணக்கம். எங்கள் தீவில் பலநாளாகத் திருடிவந்த ஒரு பெரிய திருடன் இப்பொழுது அகப்பட்டுவிட்டான். அந்தத் திருடன் கொஞ்ச நாள் முன்பு ஒரு மனிதனே அப்படியே ஸ்வாஹா செய்துவிட்டான் என்ருல் பார்த்துக்கொள்ளுங்களேன்! அவன் யார் தெரியுமா? 350 பவுண்டு எடையுள்ள ஒரு பெரிய சுருமீன்தான்! ஒன்பது அடி நீளம் உள்ளது. இதைப் பிடிப்பதற்குள் என்ன கஷ்டம், போங்கள்!

K. யோகநாதன், (N. 42), அந்தமான் தீவுகள்.

* • * •

எது சரி?

1. பிரயாகை: ஒரு ஜீவநதி-ஒரு துறைமுகப்பட்டினம்- கங்கையும் யமுனேயும் சேருமிடம் - ஒரு கோடை வாசஸ்தலம்.
2. பியானே: ஒரு மிருகம் - ஒரு சங்கீதக் கருவி - ஒருவித நடனம் - ஒருவித மரம்.
3. எவரெஸ்ட்: ஒரு பெரிய பள்ளத்தாக்கு - ஒருவித ஆகாரப் பொருள்-இமயமலேயின்சிகரம்-காங்கேயக் காளேயின் பெயர்.

—R. துரைராஜன். மயிலாப்பூர்.

* * * *

உனக்குத் தெரியுமா?

வெளுப்பிலுண்டு	கறுப்பில் இல்லே
சண்டையிலுண்டு	சச்சரவில் இல்லே
எண்ணெயிலுண்டு	எள்ளில் இல்லே
யுக்தியிலுண்டு	சக்தியில் இல்லே
திண்ணேயிலுண்டு	வாசலில் இல்லே
வடக்கிலுண்டு	தெற்கில் இல்லே
சுவரிலுண்டு	கூரையில் இல்லே
குன்றிலுண்டு	மலேயில் இல்லே.

விடை: [illegible]

P.S. N., மயிலாப்பூர்.

எது சரி? விடைகள்

1. கங்கையும் யமுனேயும் சேருமிடம்.
2. ஒரு சங்கீதக் கருவி.
3. இமயமலேச் சிகரம்.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS, 4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

கண்ணன் கிளைக் கழகம்

37. தேவகோட்டை — உபதலைவர்: V.R. முத்தையா
பொருளாளர்: S.T. கதிரேசன்
செயலாளர்: S.T. லக்ஷ்மணன்
வா. நிர்வாகி: இராம இலக்குவன்

பத்து அங்கத்தினர்கள் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

38. திருவையாறு — உபதலைவர்: K. ராமமூர்த்தி
பொருளாளர்: K. வேங்கடரமணன்
செயலாளர்: N. பாலசுப்பிரமணியன்
வா. நிர்வாகி: K. வேங்கடரமணன்

பத்துப் பேர் கொண்ட ஒரு செயற்குழுவும், பத்துப்பேர் அடங்கிய உடற்பயிற்சிக் கூடமும், 'கதிரவன்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

39. திருமங்கலம் — உபதலைவி: குமாரி கௌரி
பொருளாளர்: ,, ராஜேஸ்வரி
செயலாளர்: ,, பாகீரதி, பிரேமா,
,, நாராயணி

பத்துப்பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. சுற்று வட்டாரத்திலுள்ள, இதில் சேராத பெண் குழந்தைகளும் சேரலாம்.

40. திப்பிராஜபுரம் — உபதலைவர்: K. கிருஷ்ணமூர்த்தி (K. 561)
பொருளாளர்: R. விஜயன்
செயலாளர் & வா. நிர்வாகி: G. சாமிநாதன்

பத்துப்பேர் அடங்கிய செயற்குழுவும், 'லாடு' என்ற கையெழுத்துப் பத்திரிகையும் ஆரம்பித்திருக்கிறார்கள்.

41. திருச்சிராப்பள்ளி -II — உபதலைவர்: A. ஜான் தேவதாஸ்
பொருளாளர்: S ஸ்டார்ஸ் லூயிஸ்
செயலாளர்: A. மேரியா செல்வ ராஜன்

செயற்குழு ஏழு அங்கத்தினர்களைக் கொண்டது.

42. கடலூர் N.T (புதுப்பாளையத் தொகுதி) — உபதலைவர்: R- முரளீதரன்
பொருளாளர்: S. பாலகிருஷ்ணன்
உதவி : C. S. நரசிம்மன்
செயலாளர்: M. பிம்பராஜன்

பத்துப்பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களும் சேரலாம்.

Reg. No. M. 5542

கண்ணன்

எப்ரல் இதழில் . . . .

கண்ணன் படிக்கும் குழந்தைகளுக்கு அவசியமான ஒரு பகுதி அடுத்த இதழில் ஆரம்பமாகிறது. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று நீங்கள் படித்திருப்பீர்கள். மன வளர்ச்சி பெறுவதுடன் உடல் வளர்ச்சியும் பெற்று நீங்கள் வசீகரமாக இருக்க வேண்டாமா? அழகான உடலை, ஆரோக்கியமாகவும் வைத்திருக்க வேண்டும்; வளர்க்க வேண்டும். மன வளர்ச்சி ஏற்பட ஏற்பட உடல் வளர்ச்சி அடையாமல் குன்றிப்போக விடலாமா? அதற்கு உதவியாக இந்த யோகாஸனப் பயிற்சி இருக்கும். ஒரு யோகாஸன நிபுணரின் பிள்ளை இந்தப் பயிற்சியைச் செய்கிறான். முதலில் சூரிய நமஸ்காரம் என்ற அப்பியாசத்தின் படங்கள் வெளிவருகின்றன.

இன்னும் உங்கள் அபிமான எழுத்தாளர்களின் கதைகளும் புதிய விஷயங்களும் வருகின்றன.

தனிப் பிரதி 4 அணா ★ வருஷ சந்தா 3 ரூபாய்